$1.50

சிறப்பாசிரியர்
கே. ரி. சண்முகராஜா

ரோஜா

ஜனவரி 1997 மலர்: 3 இதழ். 17

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரடைஸ் அச்சகம்

Tel: (416) 288-6449 Fax: (416) 288-0595

Graphic Desings
Instant & Commercial
Printing

Since 1991

அச்சுவேலைகள் எவையானாலும்
குறைந்த செலவில் - நிறைந்த தரத்துடன்
செய்துகொள்ள நாடவேண்டிய நிறுவனம்

Paradise Print

1231 Ellesmere Road, Suite. 201,
Scarborough, ON. M1P 2X8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உள்ளே...

- நவீன ஓவியம் - 04
- வதை (கவிதை) - 09
- இதயராகம் - 07
- சிறகுகள் இல்லாத பறவைகள் (சிறுகதை) - 09
- அறிவியல் - 17
- மனம்விட்டு - 23
- கேள்வி - பதில் - 24
- எங்களின் நாட்கள் (கவிதை) - 26
- ரவுண்ட் அப் - 27
- சிறுவர் பூங்கா - 31
- சிறப்பாசிரியர் பக்கம் - 32
- முல்லைக்குத் தேரானான் (சிறுகதை) - 34
- போரழகி முதலிரவு (உணர்வுச் சித்திரம்) - 37
- சந்திப்பு - 45
- பொங்கல் விழா - 49
- பெண் விடுதலை - 51
- கருவறை வாசனை (கவிதை) - 52
- எழுத்தாளர் அரும்பு - 53
- விளையாட்டு - 56
- வர்த்தகம் - 58
- சினிமா - 60
- விவேகச் சக்கரம் - 63

அடுத்த இதழில்...
இலவச இணைப்பு
'விடுதலை முரசு'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ கௌரி மங்கள சேவை

அனைத்து இந்துமத கிரியைகளுக்கும்
கனடிய திருமணப் பதிவு அதிகாரி, இந்து மதகுரு

சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள் (ஜயாமணி)
(புங்குடுதீவு - 10)

(416)

2
6
6

3
3
3
3



(416)

2
6
6

3
3
3
3

அனைத்து இந்து மத கிரியைகளுக்கும், திருமணம் போன்ற
மங்களகரமான வைபவங்களுக்கு வேண்டிய அனைத்து தேவைகளுக்கும்;
குறைந்த வாடகையில் ஸ்காபுரோ. ரொறன்ரோ இடங்களில் மண்டப வசதிகளும்
செய்து கொள்வதற்கும் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்

கல்யாண மண்டபம், மணவறை, பந்தல் அலங்காரம். பூமாலை,
ஆண்டாள் மாலை, சடைநாகம். தலைப்பாகை, பூஜைக்குரிய பொருட்கள்
இவை அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

628 E Birchmount Road, Scarborough, ON. M1K 1P9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம் இதயம் நிறைந்த வாசகர்களே!

இந்த மாதம் முதல் நாம் பல புதிய பகுதிகளை ஆரம்பித்திருக்கின்றோம். 'கேள்வி-பதில்', 'ரவுண் அப்', 'விவேகச் சக்கரம்' ஆகியன இம்மாதம் சேர்க்கப்பட்ட புதிய பகுதிகளாகும். அடுத்த மாதத்தில் 'பார்த்ததும் அறிந்ததும்' - 'ரோஜா'க் கலைஞர்களின் சுற்றுலாக் கட்டுரை, கலைவாணி இராஜகுமாரன் எழுதும் 'குறுநாவல்' போன்றவை ஆரம்பமாக இருக்கின்றன.

'ரோஜா'வின் வாசகர் வட்டம் ஒன்றை ஏற்படுத்துவதன் மூலம் ஒரு சிறந்த சஞ்சிகையாக 'ரோஜா'வினை மணம்வீசச் செய்யலாம் என்ற அசைக்கமுடியாத நம்பிக்கை எமக்குண்டு. உங்கள் ஆலோசனைகளை வரவேற்கும் அதேவேளை உங்கள் நண்பர்களுக்கு 'ரோஜா'வினை அறிமுகம் செய்யுமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

எங்கள் தொடர்புகளுக்கு, (416) 703-5689 என்ற தொலைபேசி இலக்கத்தில் உங்கள் விபரங்களை பதிவுசெய்யுங்கள்.

'ரோஜா' வெளியீட்டுப் பிரிவு
தமிழ் கிரிஜேட்டஸ் - கனடா

தைப்பொங்கல் வாழ்த்துகள்!

எமது வாசகர்கள், எழுத்தாளர்கள்,
கலைஞர்கள், ஓவியர்கள்,
விளம்பரதாரர்கள்
மற்றும் அனைவருக்கும்
எமது இனிய பொங்கல் வாழ்த்துகள்!

தமிழ் கிரிஜேட்டஸ் - கனடா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரிஷாந்திக்காகவும் இன்னும் புதையுண்டுபோன பலருக்காகவும்...

• கலைவாணி இராஜகுமாரன்

நாங்கள்..........
கேட்காத ஓலம்
செவிப்பறைகளை
சித்திரவதை செய்யும்!

நாங்கள்.............
பார்க்காத
அந்தக் கோலம்.....
மனக் கண்களை
புண்களாக்கும்!

வார்த்தைகளையே
குலை நடுங்க வைக்கிற
குரூரம்.....
உன் மரணம்!
எழுத வரும் என் பேனா
இரத்தம் சொட்டும்!

எனினும்..... எழுதுவோர்!
உனது பெயரை
உரத்துச் சொல்லுவேன்!

ஏனெனில்.......
வதைக்கப்பட்டு
புதைக்கப்பட்ட பூக்களின்
பிரதிநிதி நீ!

கண்களை மூடிக்கொண்டு
காமப்பால் குடித்த
காவல் பூனைகளை
சபைமுன் நிறுத்திய
சாட்சியம் நீ!

அதனால்.....
வார்த்தைகளே
வாய் பொத்தி நடுங்குகிற
கொடுமைதனை
எழுத்தில் எடுத்து வரும்
என் பேனா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1997ம் ஆண்டில்....
'ரோஜா' சஞ்சிகை
சந்தா முறையை
அறிமுகம் செய்கிறது!

பெப். 1997 - ஜனவரி 1998

ஆண்டு மலர் உட்பட பன்னிரண்டு இதழ்களுக்குமான வருட சந்தா: (தபால் கட்டணம் உட்பட)

கனடா	$30.00 CDN
அமெரிக்கா	$35.00 CDN
ஐரோப்பியா	$50.00 CDN

இலவச இணைப்பு

நான்கு 'விடுதலை முரசு' இதழ்கள்

இதற்கான காசுக் கட்டளையை அல்லது காசோலையை 'THAMIL CREATORS OF CANADA' என்ற பெயருக்கு எழுதி, உங்கள் பெயர், முகவரியையும் தெளிவாக எழுதி கீழ்காணும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும். (பணமாக தபாலில் அனுப்பவேண்டாம்)

மலர். 4 இதழ். 17

ரோஜா

கலை இலக்கிய மாத மலர்

ஜனவரி 1997

பிரதம ஆசிரியர்:
வி.எல். ஆனந்த்.

உதவி ஆசிரியர்கள்:
கலைவாணி ராஜகுமாரன்.
எஸ். ராஜ்மோகன்.

பிரசுரம்/விளம்பரம்/
அட்டை வடிவமைப்பு:
தமிழ் கிரியேட்டஸ் - கனடா

அச்சமைப்பு/வடிவமைப்பு:
அனுசியா ஆனந்த்.
எஸ். கிரியேசாத் ரைப்செட்டிங்

படப்பிடிப்பு/ஓவியம்:
கருணா கிரியேட்டிவ் போட்டோ

அட்டை அச்சடிப்பு:
விவேகா அச்சகம்

அச்சடிப்பு:
பரடைஸ் அச்சகம்

விநியோகம்:
சோதி

ஆக்கங்கள், விளம்பரங்கள்:

தொலைபேசி: **(416) 703-5689,** தொலைநகல்: **(416) 425-2625**
மொன்றியல்: **(514) 747-5931** *(சண்)*

"ROJAH" F.P.P.O., P.O.BOX 45593, 747 DON MILLS RD,
DON MILLS, ON. CANADA, M3C 3S4.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் கடமை

கனடா எமக்குப் புகலிடம் தந்த நாடு. நாம் செய்யவேண்டிய கடமைகளில் தவறிவிட்டு கனடாவை குற்றம் கூறுவது முற்றிலும் தவறானது.

கடந்த மாதம் ஒரு பெற்றோருடன் கதைத்துக் கொண்டிருந்தபோது அவரின் பிள்ளைகளின் குறைகளைச் சுட்டிக் காட்டிவிட்டு இறுதியாக "இந்த கனடா-தான் பிள்ளைகளைக் கெடுக்குது; விரைவில் இந்த நாட்டைவிட்டு போகவேண்டும்..." என்று கூறினார். இதேபோன்று பலர் சொல்லிக் கேள்விப்பட்டிருக்கின்றேன்.

இவ்வாறு கனடாமீது சுமத்தப்படும் குற்றச் சாட்டு சரியானதா?!.... சற்றுச் சிந்தித்துப் பாருங்கள். எங்கள் நாட்டில் கிடைக்காத சுதந்திரத்தை இந்த நாட்டில் அனுபவித்துக் கொண்டு, தங்கள் பிள்ளைகளை நல்வழிப்படுத்தத் தாங்கள் தவறிவிட்டு இந்த நாட்டைக் குற்றம் கூறுவது தவறானதாகும். பிள்ளைகளை அடித்துத்தான் திருத்தவேண்டுமென்பதல்ல; அவர்களைத் திருத்துவதற்குப் பல வழிகள் உண்டு. அதில் ஒன்று அன்பு.

"நாங்கள், எங்கள் கடமைகளைச் சரியாகச் செய்யவேண்டும். அதில் தவறிவிட்டு புகலிடம் தந்த நாட்டையும், சட்டங்களையும் குறைகூறுவது முற்றிலும் தவறானதாகும்."

கடந்த சில ஆண்டுகளுக்கு முன் ஒரு பட்டிமன்றத்தில், 'கனடாச் சட்டங்களே எமது சமுதாயத்தை குற்றம் செய்ய வைக்கின்றன' என்று தீர்ப்பு வழங்கப் பட்டிருந்தது. இது முற்றிலும் தவறான தீர்ப்பு என்பது பலரின் கருத்து.

நாங்கள் இந்த நாட்டிற்கு இடம் பெயர்ந்தவர்கள்; இந்த நாட்டின் சட்டங்களை மதித்துநடக்க வேண்டியவர்கள்; நாம் இந்த நாட்டின் சட்டதிட்டங்களைச் துஷ்பிரயோகம் செய்வது எங்கள் தவறு. அந்தச் சட்டங்களின் தவறல்ல. எமது சமுதாயத்துக்காக தனியான சட்டத்தை அமுல்செய்யமுடியுமா?.....

நாங்கள் எங்கள் கடமைகளைச் சரியாகச் செய்யவேண்டும். அதில் தவறிவிட்டு புகலிடம் தந்த நாட்டையும், சட்டங்களையும் குறைகூறுவது முற்றிலும் தவறானதாகும். எமது சொந்தநாட்டில் இல்லாத சுதந்திரம் எமக்கு இங்கே கிடைக்கின்றது. எமது மொழியை படிப்பதற்கான வசதிகள் இருக்கின்றன. தங்கள் பிள்ளைகளுக்கு தமிழ்மொழியைப் கற்பிக்காமல் விடுவது யாருடைய குற்றம். எதையுமே சிந்தித்துப் பார்க்காமல் குறைகூறுவதை விட்டு விடுங்கள்.

எமது கடமையைச் சரியாகச் செய்வோம்; எங்கள் பிள்ளைகளை நாங்கள் நல்வழிப் படுத்துவோம்; எமக்குப் புகலிடம் தந்த கனடா நாட்டுக்கு நன்றியுள்ளவர்களாக இருப்போம்; எமது மொழியை எங்கள் பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுப்போம்.

வி. எஸ். ஆனந்த்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கிய உறவுகள்

• கவிஞர் வி. கந்தவனம்

11 இலக்கிய கலா நிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

பண்டிதமணி, பைந்தமிழ்முனி, தமிழ் தந்த தந்தையார், கற்றவர் தோயும் கம்பர் முகில், முதுபெரும் புலவர், சித்தாந்த சாகரம், ஆறுமுகநாவலரின் அடிச்சுவடு, கந்தபுராணக் கலசாரத்தின் கலங்கரை விளக்கம், மகா வித்துவான்..... என்றெல்லாம் போற்றப்படுகின்ற இணையற்ற சிந்தனாவாதி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் வாழ்ந்த காலத்தில் நாமும் வாழக் கொடுத்து வைத்தோமே என்று பெருமைப்படுகின்ற ஆயிரம் ஆயிரம் தமிழ் அபிமானிகளில் நானும் ஒருவன்.

இந்தப் பேறு ஒன்றினைத் தவிர, நான் பண்டிதமணியிடம் படித்தவன் என்றோ பண்டிதமணியிடம் படித்த பண்டிதரின் மாணாக்கன் என்றோ பண்டிதமணி பிறந்த ஊரிற் பிறந்தவனென்றோ பெருமையாகச் சொல்லி உயரப் பறக்கக்கூடிய உரிமைப் பாடுகள் வேறு எதுவும் எனக்குக் கிடையாது.

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களை நான் முதன்முதலாகச் சந்தித்தது ஒரு தெய்வீகச் செயல். அவரின் பிறந்த பதி மட்டுவில். எனது தந்தையார் வேலு விநாயகர் பிறந்ததும் மட்டுவிலேயாகும். ஆனால் நான் பிறந்தது அதற்குத் தென்பகுதியில் உள்ள நுணாவிலில்.

ஒருமுறை முத்துத்தம்பி உபாத்தியாயரால் மட்டுவில் தெற்கில் தாபிக்கப்பெற்ற சரஸ்வதி வித்தியாசாலைக்கு முன்னால் உள்ள வீதியால் எனது உறவினர் வீட்டிற்குச் சென்றுகொண்டிருக்கையில் வித்தியா சாலைக் குள்ளே யாரோ பாடும் சத்தம் கேட்டது. அந்தப் பாடும் குரல் எனக்கு வசியக் குழை அடித்தது.

படலையைத் திறந்து உள்ளே பார்த்தேன். புராண படனம் நடந்துகொண்டிருந்தது. ஒருவர் அழகாகப் பாட இன்னொருவர் பாடலுக்குப் பொருள் சொல்லிக் கொண்டிருந்தார். எட்டுப் பத்துக் கிழவர் கிழவியர் கிட்ட இருந்து கேட்டுக் கொண்டிருந்தனர். நானும் போய் அவர்களுடன் இருந்தேன்.

எனது கவனம் எல்லாம் பாட்டுப் பாடுபவர் மீதே இருந்தது. அவர் பாடுவது செவிகளுக்கு இனிமையாக இருந்தது. மற்றையவர் குனிந்தபடி தலையை இடைக்கிடை ஆட்டியவாறு இரசித்துப் பொருள் சொல்லிக் கொண்டிருந்தார். ஒருமுறை அவர் தலையை நிமிர்த்திய போது என்னைக் கண்டு கொண்டார். என்னை அவருக்குத் தெரியாது. அவர்தான் கணபதிப்பிள்ளை என்பது எனக்குந் தெரியாது. எனக்கு அப்பொழுது எட்டு அல்லது ஒன்பது வயது இருக்கலாம். அந்த வயோதிபர்களுடன் சேர்ந்து ஒரு சின்னப் பையனும் கந்தபுராணத்தைக் கேட்கின்றானே என்ற களிப்பினாலோ என்னவோ அவர் மீண்டும் மீண்டும் என்னைப் பார்த்தார். அந்தப் பார்வைகள் பூரிப்பான வாழ்த்துப் பார்வைகள் என்பது எனது பிற்காலத்து நம்பிக்கையாக வளர்ந்துவிட்டது.

புராண படனம் செய்தல் நெடுங்காலமாகவே ஈழத்துச் சைவப் பெருமக்களாற் போற்றப் பட்டுவரும் ஒரு சமய நிகழ்ச்சியாகும் இது சோழ மன்னர் 'மும்முடிச் சோழ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்டலம்' என்ற பெயரில் ஈழநாட்டினை ஆட்சி செலுத்திய காலத்தில் (993 - 1070) முக்கியத்துவம் பெற்றதென்பர். அக்காலம் முதல் ஆலயங்களில் நிகழ்ந்துவந்த புராண படன முறை மேனாட்டார் ஆட்சிக் காலத்தில் வீழ்ச்சியுறத் தொடங்கியது. ஆறுமுகநாவலர் அவர்களின் அயராத முயற்சியால் அம்முறை மீண்டும் ஆலயங்களில் மட்டும்மல்லாது வீடுகளிலும் பாடசாலைகளிலும் புனித நாட்களில் பின்பற்றப் படலாயிற்று. கந்தபுராணம், பெரியபுராணம், திருவிளையாடற்புராணம், சிவராத்திரி புராணம், திருவாதவூரர் புராணம் முதலாய புராணங்களுடன் வில்லிபுத்தூரர் பாரதம், கம்பராமாயணம் போன்ற காப்பியங்களும் படனமுறைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. காலப்போக்கில் காப்பியப் படனங்கள் முக்கியத்துவம் இழந்து புராண படனங்கள் முதன்மை பெறலாயின.

நாவலர் அவர்களைத் தொடர்ந்து அவரது மாணவ பரம்பரையினரும் பிற புலவர்களும் புராண படனக் கலையை வளர்த்து வந்தனர். இதனை ஒரு புண்ணியப் பணியாக நினைத்து இந்த நூற்றாண்டில் தொடர்ந்து செய்து வந்த பெரியார்களுள் பண்டியமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களும் ஒருவர்.

பண்டிதமணி அவர்களைப் பெற்ற ஊர் மட்டுவில்; எனின், அவரைப் பற்றிக் கொண்ட ஊர் திருநெல்வேலி. பண்டிதமணி என்றதும் பலருக்கு உடன் நினைவுகளுக்கு வருவது திருநெல்வேலிதான்.

இவர் 1929ம் ஆண்டு முதல் திருநெல்வேலிச் சைவ ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் விரிவுரையாளராகச் சேர்ந்து இளைப்பாறும் வரை அக்கலாசாலைப் பேராசானாக விளங்கியவர். இளைப்பாறிய பின்னரும் திருநெல்வேலியைத் தனது வதிவிடமாகக் கொண்வர். பண்டிதமணி அவர்களால் திருநெல்வேலி பெற்ற பெருமையைக் கண்டு இமயமும் பொறாமைப்பட்டிருக்கலாம் முன்னாளிற் பல மன்னர்கள் வலம் வந்த ஊர் பின்னாளிற் பண்டிதமணியிடம் கற்ற தமிழ் ஆசிரியர்களும் பண்டிதர்களும் அவரது இரசிகர்களுமாய தமிழ் அறிஞர்கள்

> ***பண்டிதமணி அவர்களால் திருநெல்வேலி பெற்ற பெருமையைகக் கண்டு இமயமும் பொறாமைப் பட்டிருக்கலாம்.***

வலம்வரும் தமிழ் வளர் சோலையாக மாறிவிட்டது.

திருநெல்வேலியில் எழுந்தருளியிருக்கும் இந்த தமிழ்த் தெய்வத்தைத் தரிசிக்கப் பக்தி பரவசத்துடன் ஒருநாள் புறப்பட்டேன். ஏற்கனவே அவருக்கு பேரன் முறையான சதாசிவத்துடன் பேச்சுக் கொடுத்து அன்றைய தினம் பண்டிதமணி வீட்டில் இருப்பார் என்பதையும் உறுதிப்படுத்திக்கொண்டேன்.

வீட்டு விறாந்தையில் படலையைப் பார்த்த வாறு சார்மனைக் கட்டிலிற் பண்டிதமணி அமர்ந்திருந்தார். படிகளால் ஏறி அவர் பாதங்களைத் தொட்டுக் கும்பிட்டேன். அவர் சற்று நிமிர்ந்திருந்தார். தாடிக் குள்ளால் ஒரு முறுவல் பூப்பதுபோலத் தெரிந்தது.

தமிழைத் தாய் என்றுதான் எல்லோரும் வர்ணிப்பார்கள். சிலசமயங்களில் அவள் தந்தையாகவும் தோன்றுவாள் என்பது போன்ற ஓர் உணர்வு அப்பொழுது ஏற்பட்டது.

உங்களுடைய வசனங்கள் தொல்காப்பிய சூத்திரங்கள்போல் இறுக்கமாக இருக்கின்றன. கொஞ்ச உருபுகளையோ இடைச்சொற் களையோ இடையிடையே தூவி இளக்கினால் கருத்துக்களை எல்லோரும் இலகுவாக விளங்கிக்கொள்வார்களல்லவா?' என்று பேச்சை ஆரம்பிக்க நினைத்தேன்.

அதற்குள் அவர், 'நுணாவிற் பக்கம் இடைக் கிடை போறதோ.......' என்று இழுத்தார். 'போவதுண்டு...... இனஞ்சனத்தை மறக்க முடியுமா? அவர்களைத்தான் மறந்தாலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையாரை மறக்க முடியாதே.... 'என்று நான் சொன்னதும் தான் வணங்கும் தனன்களப்புப் பிள்ளையாரின் அற்புதங் களைப் பற்றிப் பேசலானார். பிள்ளையாருக்கு என்று சேர்த்து வைத்த பணத்தை வேறு அவசர தேவை ஒன்றுக்குத் தான் எடுக்க வேண்டி இருந்தாகவும் அதற்காகப் பிள்ளையார் இரட்டி மடங்கு செலவை ஏற்படுத்தி தன்னை தண்டித்ததாகவும் கூறினார்.

தென்மராட்சியின் பெருமைபற்றி விளக்கினார். நான் அதனை அறிந்திருக்க வேண்டும் என்ற நோக்குடன் செய்யப்பட்ட ஓர் உபதேசம் போலவே அது இருந்தது. அவருக்கு உள்ளார ஊர்ப்பற்று அதிகம். ஆயின் அதுபற்றிப் பெரிதாகப் பேசிக் கொள்வதில்லை. சந்தர்ப்பம் வரும்பொழுது அதனைக் வெளிக்காட்டவும் தவறுவதில்லை. என்னைப்பற்றிப் பின்னாளில் 'தென்மராட்சிக் கணிசெய்' கவிஞர் எனக் குறிப்பிட்டதும் ஊர்ப் பற்றினால் என்றே கருதுகிறேன். மற்றும் தென்மராட்சிக் கணிசெய்பவர் அவரன்றி நானில்லை.

நேரம் போனதே தெரியவில்லை. மீண்டும் கால்களைத் தொட்டு வணங்கி விடை பெற்றேன். பிறந்த நாளைப் பலரும் பலவிதமாகக் கொண்டாடுவார்கள். நான் கொண்டாடிய விதம் இவ்வாறாம். இது பண்டிதமணிக்கும் தெரியப்படுத்தாத விதம்.

பண்டிதமணியின் உத்தம மாணாக்கர்களில் ஒருவர் இரசிகமணி கனக செந்திநாதன். பண்டிதமணி பெரிய இலக்கிய இரசிகர். பழைய இலக்கியப் புதையல்களை வெளிக் கொணர்ந்ததோடன்றிப் புதிய இலக்கியங் களிலும் நயம் கண்ட நாயகர். முக்கிய மாக ஈழத்துப் புலவர்களின் பெருமையைப் பரவலாகத் தமது எழுத்துக்களாலும் பேச்சுக்களாலும் எடுத்துக் கூறிய முதல் இரசிகர் இவரே. பாரதியாரை விபுலானந்த அடிகளார் உலகுக்கு அறிமுகப்படுத்தியது போல சின்னத்திம்பிப் புலவரையும் சோம-சுந்தரப் புலவரையும் தமிழ் உலகுக்கு அறமுகப்படுத்திய பெருமை பண்டிதமணிக் குரியது. இவர்வழிநின்று ஈழத்து எழுத்தாளர் களின் பெருமை பேசிவந்தவர் இரசிகமணி கனக செந்திநாதன். அவருடன் ஒருமுறை பண்டிதமணியைக் காணச் சென்றிருந்தேன்.

> "ஒருவர் மாப்பிள்ளையாக வீட்டுக்கு வந்த பிறகு அவரைப் பற்றி விமர்சனம் செய்யக் கூடாது"

காணச்சென்ற காலம் கலாநிதி வித்தி-யானந்தன் பேராதனைப் பல்கலைக் கழகத்துத் தமிழ்த்துறைத் தலைவராக நியமனமபெற்றிருந்த காலம் அதுபற்றி என்ன நினைக்கிறீர்கள் என்று பேச்சோடு பேச்சாகக் கேட்டுவைத்தார் செந்திநாதன்.

'பெண்ணுக்கு மாப்பிள்ளையைப் பார்த்து மணம் செய்வித்தபின் நினைப்பதற்கு என்ன இருக்கிறது?'

'சிலபேர் பொருத்தமில்லை என்று சொல்லித் திரியினம். அதற்காகத்தான் உங்கள் கருத்தைக் கேட்டன்.'

ஒருவர் மாப்பிள்ளையாக வீட்டுக்கு வந்த பிறகு அவரைப் பற்றி விமர்சனம் செய்யக் கூடாது, செந்திநாதன்.'

பண்டிதமணியின் இக்கருத்துப்பற்றிச் சாதாரண குசுகுசு காரரன்றி இலக்கிய விமர்சர்களும் சிந்திப்பது நல்லது.

பிற்காலத்தில் எனக்கும் பண்டிதமணிக்கும் நல்லதொரு தொடர்புப் பாலமாக அமைந்தவர் அவரது உறவினர் திரு. சி. சதாசிவம் அவர்கள். உற்ற துணையாகப் பண்டிதமணியுடன் இருந்து அவருக்கு வேண்டிய பணிவிடை களைச் செய்யும் பாக்கியம் பெற்றது இவரது குடும்பம். பண்டிதமணி அவரகளின் ஆக்கங் களை நூல்களாக வெளியிடுவதற்கு முன் னின்று உழைத்தவர் அவரது ஆத்ம சீடர் திரு. அ. பஞ்சாட்சரம் என்பதை யாவரும் அறிவர். பண்டிதமணி உடல்வலுக் குன்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிருந்த காலங்களில் பஞ்சாட்சரம் அவர்க ளுக்குப் பெருந்துணையாக இருந்தவர் சதாசிவமேயாவர்.

இலங்கைப் பலகலைக் கழகம் பண்டிதமணி அவர்களுக்குக் கலாநிதிப் பட்டத்தை 1978இல் வழங்கிக் கௌரவித்தது. ஆயின் அந்தப் பட்டமளிப்பு விழாவுக்குப் பண்டிதமணி யாற் செல்லமுடியவில்லை. அதனால் பட்டத்துக்குரிய சான்றிதழை 25.06.78இல் யாழ்ப்பாண வளாகத்தில் ஒழுங்கு செய்யப் பட்ட பெருவிழாவில் வைத்து பேராசிரியர் சு. வித்தியானந்தன் பண்டிதமணிக்கு வழங் கினார். அந்தக் கலைஞான விழாவில் கண்டதன்பின் பண்டிதமணி அவர்களைக் காணும் வாய்ப்பு எனக்குக் கிட்டவில்லை.

மூன்று மாதம் கழித்து எனது மகளின் நடன அரங்கேற்றத்துக்கு வாழ்த்துச் செய்தி வேண்டும் என்று சதாசிவம் அவர்கள் மூலம் செய்தி அனுப்பியிருந்தேன். பல தொல்லைகள் காரணமாக நேரிற்சென்று வேண்டுதல் செய்ய முடியவில்லை. இருந்தாலும் அவர் அடுத்த நாளே வாழ்த்துச் செய்தியை அனுப்பியிருந்தார்.

பண்டிதமணியின் பெருமை சொல்லவும் பெரிதே. அவர் 'ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர்'. அதனால் தற் பெருமை சிறிதும் இல்லாதவர். 'கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்.' உயர்ந் தோரையும் தாழ்ந்தோரையும் ஒக்கவே நோக்கித் தொண்டுபுரிந்த சுந்தர முனிவர். 'பணியுமாம் என்றும் பெருமை' என்ற வள்ளுவர் வாக்குக்குத் தக வரழ்ந்தவர். நான் நேரிலே செல்லாது வாழ்த்துச் செய்தி கேட்டு அனுப்பியது எனது மகளுக்காக மட்டுமல்ல. பிறருக்காகவும் அன்பர் சதாசிவம் மூலம் சொல்லி அனுப்பிப் பெற்றிருக்கின்றேன். வருத்தமாகக் கிடப்பினும் அன்பர்களை வாழ்த்துவதற்கு அவர் என்றைக்குமே வரையறை வைத்துக்கொண்டது கிடையாது.

தென்மராட்சி பெற்றெடுத்த தவமுனிவர் பன்மராட்சியிலும் ஞான ஒளி வீசத் தமிழுக்கும் சைவத்துக்கும் ஆற்றிய பணி அளப்பரியது.

அடுத்த இதழில்...

தமிழ்பேசும் சீனப் பெண்மணி!

அட்டைப்படம்:

'ஒரு ரோஜாவின் போராட்டம்' வீடியோத் திரைப்படத்தின் கதாநாயகி மாலினி.

படங்கள்: கருணா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறகுகள் இல்லாத பறவைகள்

• கலைவாணி இராஜகுமாரன்

வெளியே மழை சிலுசிலுவென்று தூறிக் கொண்டிருந்தது. காலை ஏழு மணியாகி விட்ட போதிலும் இருள் விலகவில்லை. மீண்டும் உறக்கத்துக்குள் ஆழ்ந்து விட தீபா முயன்று கொண்டிருந்தாள். ஆனால் உறக்கம் என்னவோ பிடிவாதமாய் விலகி நின்றது.

ஒருவித சலிப்போடு போர்வையை விலக்கிக் கொண்டு எழுந்தாள் தீபா. அவள் கால்கள் ஏதோ கட்டளைக்குக் கட்டுப்பட்டன போல ஜன்னலருகை நாடின.

ஈரத்தைக் கிழித்துக் கொண்டு வாகனங்கள் விரைந்து கொண்டிருந்தன. தொலைவில் தெரிந்த மரங்கள் இலைகளை உதிர்த்து விட்டு மொட்டையாய் நின்றிருந்தன, ஆங்காங்கே நின்றிருந்த கிறிஸ்மஸ் மரங்களின் பச்சை மனதுக்கு ஒருவித நம்பிக்கையை அளித்தது. துணிக் குவியல்களுக்கிடையே முகம் மட்டும் தெரிய மனிதர்கள் போய்க் கொண்டிருந்தார்கள்.

மழையை, மரங்களை பேசாது நடக்கிற மனிதர்களை பார்க்கிற போதெல்லாம் மனதில் ஒரு சோகம் வந்து ஒட்டிக் கொள்வதை அவள் உணர்ந்தாள். மழை நேரங்கள் மனதை ஏன் இப்படி மென்மையாக்கி விடுகின்றன என்பதைப் பலதடவை யோசித்தும் விடை காண முடிவதில்லை. என்னவென்று புரியாத, சொல்லத் தெரியாத ஞாபகத்தில் வராத ஏதோ ஒரு உறுத்தல். இரகசியமாக அழவேண்டும் போல ஒரு தூண்டுதல், எல்லாம் இழந்து போனதான ஒரு சுயபச்சாத் தாபத்தில் மனம் விசும்பும்.

அங்கு மழை நாட்கள் இப்படி இருந்ததில்லை. மழைத்தூற்றலின் இடையே குடையோடு நடந்து போகிற போது எல்லாம் எல்லோரும் அழகாய் இருப்பது போன்றதொரு உணர்வை அவள் அனுபவித்திருக்கிறாள். இரவு மழை பெய்து ஓய்ந்த பின் விடியற் காலையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசற்படியில் அமர்ந்து பார்க்கிற போது.... மரம் செடி கொடிகளெல்லாம் ஈரமினு மினுப்புடன் சந்தோஷமாகத் தலையாட்டிக் கொண்டிருப்பது போலத் தோன்றும். இறங்கிப் போய் ஒவ்வொரு பூவாய், ஒவ்வொரு இலையாய் தடவிக் கொடுக்க வேண்டும் போலிருக்கும். முள் முறுக்கம் பூவின் சிவப்பு பளிச்சென்று தெரியும்.

இங்கு வாசற்படியோ, முற்றமோ தலை யசைத்து வாவென்றழைக்கிற முள் முறுக்கம் பூவோ இல்லை. கதவைத்திறந்ததால்..... உயிரற்ற சுவர்களும் பூட்டிய கதவுகளும், அதில் தெரியும் இலக்கங்களும் நீண்ட நடைபாதைகளும்தான்.

ரவியை வழியனுப்ப கதவைத் திறக்கிற போதெல்லாம் முன் 'அபார்ட்மென்ட்' பூட்டிக் கிடப்பதையே அவள் கண்டிருக்கிறாள். அங்கு யார் இருக்கிறார்களென்பதே அவளுக்குத் தெரியாது. வெள்ளை, கறுப்பு மஞ்சள் என எந்த நிறத்திலும் முகங்களைக் காண்பதில்லை.

வழியனுப்பும் போது வழக்கம் போல ரவி கன்னத்தில் முத்தமிடுவான்' போன் பண்ணு கின்றேன்' என்று சொல்லி விட்டு போவான். அந்த முத்தமும் வார்த்தைகளும் கூட ஒரு இயந்திர கதியோடு வெளிப்படுத் தப்படும். அந்த முத்தத்தில் 'உன்னைப் பிரிகிறேனே' என்ற தாபம் இருப்பதாக அவளுக்குத் தெரிவதில்லை. உறங்குவது குளிப்பது வாசிப்பது போல. இதுவும் உணர்வுகளற்ற செயலாகத் தோன்றும். 'நேரத்திற்கு வேலைக்குப் போக வேண்டுமே!' என்கிற அவசரத்தில் அவன் ஓடுவதைப் பார்க்கும் போது பரிதாபமாக இருக்கும். கதவைப் பூட்டி விட்டு உள்ளே வரும் போது எல்லாம் வெறுமையாய், சூனியமாய்த் தெரியும். இனி 'என்ன செய்வது?' என்ற கேள்வி எழும். சமைப்பது சாப்பிடுவது துணிதுவைப்பது, தொலைக்காட்சி பார்ப்பது வாசிப்பது என்று அத்தனையும் முடித்தபின் கண்களை மூடி படுக்கையில் சாயும் போது பழையபடி வெறுமை தாக்கும்.

> **இங்கு வாசற்படியோ, முற்றமோ தலையசைத்து வாவென்றழைக்கிற முள் முறுக்கம் பூவோ இல்லை. கதவைத்திறந்ததால்..... உயிரற்ற சுவர்களும் பூட்டிய கதவுகளும், அதில் தெரியும் இலக்கங்களும், நீண்ட நடைபாதைகளும்தான்.**

'வாழ்க்கை' என்பதன் அர்த்தம் வழியனுப்பு தலும், வரவேற்பதும் உண்பதும் உறங்கு தலுமா என்கிற சலிப்பு ஏற்படும். எத்தனை காலம் இப்படி வாழ்வது என்கிற சலிப்பு ஏற்படும். எதிலும் திருப்தி இல்லாது எது வாழ்க்கை எனும் தேடுதலிலேயே நாட்கள் கழிந்து போய்க் கொண்டிருப்பதை கையா லாகாத்னத்தோடு பார்த்துக் கொண் டிருப்பதைத் தவிர செய்யும் வழியறியாது மனம் கலங்கும் கப்பல் பறவையாய் கலவரப்படும். கரைக்குத் திரும்ப வழி தெரியாமல், கப்பலிலும் தங்க முடியாமல் அங்குமிங்கும் அலைந்து தவிக்கும் பறவையாய்த் தன்னை உணர்வாள்.

> "என்னைப் போல இங்கு எத்தனையோ பேர் ஊர் பிரிந்து உறவுகளைப் பிரிந்து இங்கு வந்து வேரூன்றி விடவில்லையா? நான் மட்டும் ஏன் இப்படி அல்லற் படுகிறேன்...;
>
> நான் வாழ்க்கை பற்றி அதிகம் அலட்டிக் கொள்கிறேனோ... அதனிடமிருந்து அதிகம் எதிர்பார்க்கிறேனோ..."

என்று சுயபரிசோதனை செய்வாள். ஆனாலும் இழந்து போன நாட்களுக்காக மனம் ஏங்குவதை அவளால் தடுக்க முடியவில்லை.

இன்று எனக்கு என்ன நடந்தது...... ஏன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனுடைய அணைப்புக்கு நடுங்கியபடி அவள் கூறிய வார்த்தைகள் இரத்தத்தை உறைய வைப்பனவாக இருந்தன.

இப்படி...... என்று எண்ணியவளாக கூடத்திற்கு வந்து தொலக்காட்சிப் பெட்டிக்கு உயிர் கொடுத்தாள் தீபா.

★★★★★

சுவர்க் கடிகாரம் மணி ஒன்பது என்பதை அறிவித்து ஓய்ந்தது.

ரவி வேலையிலிருந்து வந்து குளித்து, பத்திரிகையில் மூழ்கிப் போனான்.

தீபாவின் மனம் யோசித்து யோசித்து களைத்துப் போயிருந்தது. ஆறுதலை, அரவணைப்பைத் தேடித் தவித்தது. யாரிடமாவது மனதில் கிடப்பதையெல்லாம் கொட்டி அழ ஆசை வந்தது

அவன் வாசித்துக் கொண்டிருந்தான்....!

'இந்த ஆண்கள் ஏன் இப்படி இருக்கிறார்கள்...? அநேகமாக எல்லா ஆண்களும் இப்படித்தான் இருக்கிறார்கள். காதலித்து மணம் முடித்து பிள்ளை பெற்றுக் கொள்வதோடு வாழ்க்கைத் தேர் இருப்பிற்கு மீண்டு விட்டதாகக் கருதுகிறார்கள். காதல் கனவு, கவிதை என்கிற சுகங்களையெல்லாம் கழற்றிப் போட்டு விட்டு அரசியலை வியாபாரத்தை காசைக் காதலிக்க ஆரம்பித்து விடுகிறார்கள் ஆனால்........ பெண் அப்படியல்ல; சின்னச் சின்னச் சந்தோஷங்கள், பகிர்ந்து கொள்ளுதல்கள் அவளுக்குத் தேவையாய் இருக்கின்றன.'

அறைக்குள் போய் ஜன்னலருகே நின்று வெளியில் தெரிந்த வெளிச்சப் பொட்டுக்களை வேடிக்கை பார்க்கிற போது.... கூடத்திலிருந்து ரவியின் உரத்த சிரிப்பைக் கேட்க முடிகிறது.

'ஓ.......! தொலைபேசியைக் கையில் எடுத்தாயிற்று..... இனி சிரிப்பும் பேச்சுமாய் அரை மணி கழியும்!...' எண்ணுகிறபோது தனிமை முகத்தில் அறைந்தது.

"தீபா.........!" அவன் அழைக்கும் குரல் சில நிமிடங்களில் ஒலித்தது.

"சாப்பாட்டைப் போடுங்கோ!..... எனக்கு பசிக்குது!"

தலையாட்டி விட்டு சமையலறைக்குப் பொகும் போது அவன் குரல் தொடர்ந்து வந்தது.

"இண்டைக்கு கடிதம் ஏதும் வந்ததா....?"

"இல்லை" என்பதாய் தலையசைத்தாள்.

சாப்பிட்டுவிட்டு படுக்கை விரிப்புகளை உதறி விரித்த போது கேட்டான்.

"உமக்கு ஏதும் சுகமில்லையா....?" அவன் குரலில் எரிச்சல் கலந்திருந்தது. களைத்துப் போயிருப்பதையும் உணர முடிந்தது.

"இல்லை" என்றபடி அவள் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

"என்ன நடந்தது...?" மீண்டும் கேட்டான்.

"ஒன்றுமில்லை! தலை வலிக்குது!" அவன் நம்பப் போவதில்லை என்பதை உணர்ந்திருந்த போதிலும் அவள் பொய் சொன்னாள்.

"நான் களைச்சுப் போய் வந்திருக்கிறன்; நீரும் முகத்தை உம்மெண்டு வைச்சிருந்தால் நானென்ன செய்யிறது.......!" அவன் குரல் உரத்து ஒலித்தது.

"நானொண்டும் இப்ப சொல்லேல்லை...!'

"ம்..... இந்த வீட்டிலை நிம்மதியா இருக்கேலாது!" அவன் இரைந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னாலேயும் இனி இங்கே இருக்கேலாது!" அவளையும் மீறி அவளுடைய ஆற்றாமை வெளிப்பட்டு விட்டது.

கோபத்தோடு உயர்ந்த குரல் அழுகை திணறியது.

அவன் அருகிலிருந்த கதிரையைக் காலால் உதைத்தான். பின் அவளைப் பார்த்துக் கத்தினான்.

"அப்ப ஏன் இங்கை வந்தனீ.....!"

அவளும் பதிலுக்குக் கத்த விரும்பினாள். ஆனால்..... அழுகை குரலை அழுத்தி விட்டது. ஏன் தன்னால் திருப்பிக் கத்த முடியவில்லை என ஆத்திரம் கொண்டாள். "அம்மா!" என்ற கேவல் உள்ளுக்குள் எழுந்தது. 'இதைத் தவிர்த்திருக்கலாமோ!' என ஆதங்கப்பட்டாள். மென்மையும், மேன்மையும் சகலமும் இழந்து அதட்டுகிற ஆண் முன் தலை குனிந்து கண்ணீர் வடிக்கும் நிலை எனக்கு ஏன் வந்தது என்கிற சுயபச்சாத்தாபத்தினால் இதயம் அழுதது.

"நாள் முழுவதும் உழைத்து விட்டு வீட்டிற்கு வந்தால்........ இவள் என்னை மலர்ந்த முகத்தோடு வரவேற்பதுதானே....; அதை விட்டு குறை சொல்கிறாளே...." என்று குமைந்தான் ரவி.

காரணங்கள் ஏதுமின்றி கோபம் வளர்ந்தது. உருவமில்லாத ஒன்று அவர்களைத் துரத்தியது. படுக்கைகள் பிரித்துப் போடப் பட்டன.

அடுத்த நாட் காலை ரவியை வழியனுப்ப அவள் வாசலுக்குப் போகவில்லை. அவனும் அதைக் கண்டு கொள்ளாதவன் போல வெளியேறினான்.

ஆனால்.... வேலையில் கவனம் பதியவில்லை. சாப்பாட்டு இடை வேளையின் போது தனது நண்பனான சுரேஷிடம் மனதைத் திறந்து காட்டினான்.

"அவள் முன்பு போல இல்லையடா....! காத்திருந்து சண்டை போடுகிறாள்!" என்றபடி தலையைக் குனிந்து கொண்டவனைப் பார்த்து வேதனைப்பட்டான் சுரேஷ்.

"இதற்கே சோர்ந்து போனால் எப்படி......? இன்னும் உண்டு.......; மனைவி முகம் திரும்புவாள்! மாமியார் குத்திக் காட்டுவாள்! உறவுகள் ஒதுங்கி நின்று கைகாட்டிப் பேசும். நண்பன் முதுகில் குத்துவான்! பிள்ளை விரல் நீட்டிக் குற்றம் சுமத்தும்! 'இப்போதே தளர்ந்து போனால் எப்படி........?" என்று உண்மை உணர்த்த விரும்பினான். ஆனால்.... அதற்கு நேரம் இதுவல்ல என்பதை தெரிந்தவனாகையால் தேற்ற முயன்றான்.

"ஏன் உன்மீது அன்பாக இல்லையா?"

"அப்படியென்றில்லை! எடுத்ததற்கெல்லாம் குற்றம் சொல்கிறாள்! தன்னோடு நான்முன்பு போல அன்பாக இல்லையாம்! ஆறுதலாகப் பேசுவதில்லையாம்! எனக்கெங்கே நேரம் கிடைக்கிறது அவளோடு பேச......" என்று வேதனைப்பட்டான்.

"அவளுக்கு உன்மீது கோபம் இல்லையடா...? அவள் கோபம் வேறு.... புரியாமல் பேசாதே!"

"எனக்கு விளங்கவில்லை!" அவன் குழப்பத்தோடு நண்பனைப் பார்த்தான்.

"தீபாவின் கோபம் உன்மீதல்ல! இந்தத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனிமை வாழ்வில், ஒட்டாமல் வாழும் உறவுகளில், ஊரைப் பிரிய வைத்த போரில் நீ வேலை..... வேலை...... என்று அலைந்து தேடும் பணத்தில்..... இவற்றிலெல்லாம் தான் கோபம்! பேச ஆட்களற்ற தனிமை நீ செய்கிற வேலையை விடக் கடின மானது என்று உனக்குத் தெரியதா..?'

ரவி மௌனமாக இருந்தான்.

"பாவம் அவள்! இன்று நான் போய் வருகிறேன் என்று சொல்லவேயில்லை.... முத்தமிடவுமில்லை....! அழுது கொண் டிருப்பளோ....?

அன்று முழுவதும் வேலையில் கவனம் பதியவில்லை. 'சுபர்வைசர்'' அதைக் கண்டு பிடித்து விட்டான். அவனும் அன்று ஏதோ கோபத்தில் இருந்தான்.

"வீட்டிற்குப் போகவில்லையா....?" கேலி தொனிக்கக் கேட்டான் .

"ஆம்!....." என்று சொல்ல நினைத்தான். சொன்னால் வேலை போய் விடுமென் பதால் மௌனத்தைக் கடைப்பிடித்தான்.

வேலை முடிந்து பஸ்ஸில் வந்து இறங்கிய போது பொலிஸ் கார் ஒன்று விளக்குப் பந்துகள் சுழல அவனைத் தாண்டிப் போயிற்று.

"கடவுளே! எங்களுடைய 'பில்டிங்'இற்குத்தான் போகிறது... என்னவாயிற்று.... தீபா...!" அவனுடைய கால்கள் நடுங்கின.

"ஒரு பெண் மாடியிலிருந்து விழுந்து தற்கொலை செய்து கொண்டு விட்டாள்!" நிறுத்திக் கேட்க வாயெடுத்தவன் ஏதோ எண்ணியவனாக 'பில்டிங்கை' நோக்கி நடந்தான். நடக்க... நடக்க.... பாதங்கள் பின்தங்குவது போலொரு உணர்வு அவனுக்கு ஏற்பட்டது.

'எலிவேற்றருக்காக' காத்திருந்த போது வெள்ளைத்துணியால் மூடப்பட்ட 'ஸ்ரெச்சரை' இரண்டு பேர் தள்ளிக் கொண்டு வந்தார்கள். வெள்ளைத் துணியில் ஆங்காங்கே சிவப்புத் திட்டாக இரத்தக்கரை தெரிந்தது.

'கடவுளே...! கடவுளே...! இந்தத் தடவை... இந்த ஒரு தடவை என்னை மன்னித்து விடு...!"

இரண்டு கைகளையும் விரித்து மானசீகமாக இறைவனிடம் மன்றாடினான்.

வீட்டுக் கதவைத் திறந்து உள்ளே போன போது அவன் மனம் அடித்துக் கொண்டது. அவன் கதவு திறந்த சததம் கேட்டு திரும்பினாள் தீபா.

அவள் பல்கனியில் நின்று கீழே பார்த்துக் கொண்டிருந்ததைக் கண்டதும் ரவியின் கலவரம் கண்ணீரால் வெளிப்பட்டது.

"தீபா.......!" பாய்ந்தோடிப் போய் அவளை அணைத்துக் கொண்டான்.

அவனுடைய அணைப்புக்கு நடுங்கியபடி அவள் கூறிய வார்த்தைகள் இரத்தத்தை உறைய வைப்பனவாக இருந்தன.

"பதினேழாவது மாடியில் இருந்த ராஜேஸ் அக்கா........." அவள் வார்த்தைகளை முடிக்காமல் கீழே சுட்டிக் காட்டினாள்.

அங்கு அவன் கண்டது..... 'கொன்கிறீற்' பாவிய தரை இரத்தத்தால் அபிஷேகம் செய்யப்பட்டதைப் போல காட்சியளித்தது.

பொலிசார் அந்த இடத்தில் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தனர்.

'அம்புலன்ஸ்' விளக்குகள் சுழல கட்டிடத்தை விட்டு வெளியேறியது தெரிந்தது.

தீபாவை அணைத்த கைகள் மேலும் இறுகின. அவன் கண்களில் நீர் நிறைந்திருந்தது.

அவன் ஏன் அழுகிறானென்பது தீபாவுக்குப் புரியத்தானில்லை.

கீழே ராஜேஸ் அக்காவின் பிள்ளைகள் 'அம்மா அம்மா...' எனக் கதறும் ஓசை விடாமல் கேட்டுக் கொண்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளை உலகம் இல்லை என்றால்...

• கருணா

அறுபத்தைந்து மில்லியன் ஆண்டுகளுக்கு முன் பூமியில் மோதிய வால்வெள்ளி ஒன்றினால் திடீரென உலகிலிருந்த 70%மான உயிரினங்கள் அழிந்துபோயின. சில மில்லியன் ஆண்டுகளுக்கு ஒரு தடவையே இவ்வாறான மோதல்கள் நடைபெறுமாம். கடைசி மோதல் நடந்து 65 மில்லியன் ஆண்டுகள் கடந்த நிலையில்.......

ஜூன் 30, 1908. சைபீரியப் பாலை வனத்திற்கு அண்மையில் அமைந்துள்ள 'ரங்குஸ்கா' (Tanguska) ரஷ்ய நகரம் வழமைபோல் தனது அலுவல்களில் மூழ்கிக் கிடந்தது. திடீரென வானில் சூரியனை ஒத்த பாரிய தீப்பிழம்பொன்று தோன்றியது. சிலநொடிகளில் பாரிய வெடியோசையொன்று பாலைவனப் பக்கமாகக் கேட்க அச்சிறிய நகரத்து மக்கள் அனைவரும் தாம்நின்ற இடத்திலிருந்து தூக்கி வீசப்பட்டதைப்போல உணர்ந்தனர். அவர்கள் மீண்டும் பழைய நிலைக்கு வந்தபோது வானில் 'ஒரேஞ்' நிறத்தில் பாரிய மேகம் ஒன்றைக் கண்டனர். பல நாட்கள் தொடர்ந்து ஒளிர்ந்து கொண்டிருந்த இந்த மேகத்தின் உதவியுடன் இந்நகர மக்கள் இரவினில் (எவ்வித விளக்குமின்றி) பத்திரிகைகூட வாசிக்கமுடிந்ததாம். சில நாட்களில் எல்லாம் மறைந்து விட, இது ஒரு மறந்துபோன கதையாயிற்று. அருகிலிருந்த 'சைபீரீய'ப் பாலைவனம் மக்கள் போய்வராத பகுதியாயிருந்ததனால் அங்கு என்ன நடநதது என்பதும் பெருமளவில் தெரியவரவில்லை.

இச்சம்பவம் இடம்பெற்று ஏறக்குறைய 19 ஆண்டுகளின் பின்னரேயே சோவியத் ராணுவத்தினர் அந்தப் பகுதிக்குள் செல்ல நேர்ந்தது. அங்கு முதலில்சென்ற ராணுவத்தினர் பெரும் ஆச்சரியமடைந்தனர். அங்கு ஏறக்குறைய 850 சதுரமைல் பரப்புடைய பிரதேசத்தில் பாரிய அழிவு நடந்திருப்பது தென்பட்டது. அந்தப் பகுதியிலிருந்த அனைத்து மரங்களும் முறிந்து வீழ்ந்து கிடந்தன. அக்காலகட்டத்தில் அணுக்குண்டு தொடர்பான அச்சமிருந்ததால் அந்தப்பகுதியில் பாரிய அணுக்குண்டு வெடிப்பொன்றே நிகழ்திருப்பதாக அவர்கள் கருதினார்கள். நீண்ட காலமாக அந்தப் பகுதிக்கு மேற்குலக விஞ்ஞானிகள் அதிக அளவில் செல்லமுடியவில்லை. காரணம் இந்தப் பகுதியில் அமைந்திருந்த இரண்டு நகரங்களில் (Tomsk and Krosnoyarsk) சோவியத் ராணுவத் தொழில்நுட்ப நிலையங்கள் அமைந்திருந்ததும் வல்லரசுகளுக்கிடையேயான coldwarஉம் ஆகும். ஆரம்பத்தில் அங்குசென்ற ரஷ்ய விஞ்ஞானிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1908ம் ஆண்டு வால்வெள்ளி மோதிய இடம்



அப்பகுதியை ஆய்வு செய்த போது அங்கு காணப்பட்ட மரங்களில் பூமியில் இல்லாத சில கனியங்கள் காணப்பட்டதாயும் அதன் பின்னரே பூமிக்கு வெளியேயிருந்து ஏதோ ஒரு பொருள் இங்கு வந்து மோதியிருக்க வேண்டும் எனக்கண்டறிந்ததாயும் கூறப் படுகிறது. இறுதியாக பாரிய வால்வெள்ளி ஒன்று (Comet) இங்கு மோதியிருக்க வேண்டும் என்று முடிவு செய்தனர்.

சரி முதலில் இந்த வால்வெள்ளி அல்லது Comet என்பது என்ன? இலகுவில் உடைந்து போகக்கூடிய சீரான அமைப்பில் இல்லாத துணிக்கைகளினதும், உறைந்துபோன வாயுக் களினதும் ஒருகலவையே இந்த வால்வெள்ளி என வழங்கப்படுகிறது. பொதுவாக இவை சூரியனைச் சுற்றி ஒரு பாதையைக் கொண்ட வையாக இருக்கும். இத்துணிக்கைகளைத் தொடர்ந்து நீளமான ஒரு வால் போன்ற அமைப்பு காணப்படும். பொதுவாக கிரகங் களுடன் ஒப்பிடும்போது வால்வெள்ளிகள்

பறக்கும் தட்டுகள், வேற்றுலக மனிதர்கள் தொடர்பான கதைகள்கூட இவ்வால்வெள்ளிகளைப் பார்த்ததால் உண்டானதென்பது ஒருசாராரின் வாதம்.

அளவில் சிறியவை. சாதாரணமாக வால்வெள்ளியிலுள்ள ஒரு துணிக்கையின் விட்டம் 750 மீட்டரிலிருந்து 20 கிலோ மீட்டர் அளவுடையதாகவே காணப்படும். அண்மையில் நிகழ்த்தப்பட்ட சில ஆய்வு களின்படி 300 கிலோமீட்டர் விட்டமுடைய துணிக்கைகளைக் கொண்ட வால்வெள்ளிகள் கூட இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது. எனினும் இவ்அளவானது கிரகங்களுடன் ஒப்பிடும்போது சிறியதாகவே இருக்கிறது. இவ்வகையான வால்வெள்ளி ஒன்றே பூமியின் வான்மண்டலத்தில் பிரவேசித்து 'ரங்குஸ்கா' நகரத்திற்கு அண்மையில் சைபீரியாப் பாலைவனத்தில் வீழ்ந்திருக்க வேண்டும். பறக்கும் தட்டுகள், வேற்றுலக மனிதர்கள் தொடர்பான கதைகள் கூட இவ்வால்வெள்ளிகளைப் பார்த்ததால் உண்டானதென்பது ஒருசாராரின் வாதம்.

ஏறக்குறைய 65 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் பூமியில் வாழ்ந்த 70%மான உயிரி னங்கள் திடீரென அழிந்துபோனதாக நம்பப்படுகிறது. டைனசோர்கள் கூட இந்தக்காலப்பகுதியிலே தான் அழிந்து போயிருக்க வேண்டும். இப்பாரிய திடீர் அழிவை விஞ்ஞானிகள் K-T event (Cretaceous - Tertiary Mass Extinction event - கவனிக்க C-T அல்ல K-T) என அழைக் கிறார்கள். 80களில் இத்தாலியிலுள்ள Gubbioவில் இரிடியம் (iridium) எனப்படும் கதிரியக்கமுடைய கனியம் ஒரு படையாக பூமிக்கு அடியிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் இக்கனியம்கூட 65 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த வால்வெள்ளி மோதலின்போதே பூமிக்கு வந்திருக்க வேண்டும் எனக் கண்டறியப்பட்டுள்ளது. பிளற்றினம் (platinum), ஒஸ்மியம் (osmium), ருத்தேனியம் (ruthenium), ரோடியம் (rhodium), பலாடியம் (palladium) போன்ற கனியங்கள் கூட இவ்வகையான வால்வெள்ளிகள் மோதியதாலேயே பூமிக்கு வந்ததாகக் கூறப்படுகிறது.

65 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த மேற்படி K-T event ஆனது மெக்ஸிக்கோவிலுள்ள யுக்கற்றான் (Yucatan) பகுதியிலேயே நடந்திருக்க வேண்டும் என ஆய்வுகள் மூலம் நிரூபிக்கப் பட்டுள்ளது. ஆய்வாளர்கள் இப்பகுதியில் 180km விட்டமுடைய ஒரு குழி போன்ற அமைப்பைக் கண்டுபிடித்துள்ளனர். இக்குழியுள்ள இடத்திலே தான் வால்வெள்ளி மோதியதாகவும் இம்மோதலினால் உண்டான கதிரியக்கம் சிறிது நேரத்துக்குள்ளாகவே ஏராளமான உயிரினங்களை அழித்து விட்டதாகவும் கூறப்படுகிறது. தொடர்ந்து பல நாட்களுக்கு கதிரியக்க எச்சங்கள் பூமியின் சகல பகுதியிலும் மழை போல வீழ்ந்துகொண்டிருந்ததாகவும் நம்பப்படுகிறது. சிலநாட்களின் பின் பூமியெங்கும் அமிலமழை பெய்ததாயும் இச்சம்பவங்களில் ஏனையபல உயிரினங்களும் கொல்லப் பட்டிருக்கலாம் எனவும் கூறப்படுகிறது.

இப்போது அண்மையில் நடந்த ஒரு சம்பவத்திற்கு வருவோம். 1992ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 9ம் திகதி அமெரிக்காவிலுள்ள கென்ரக்கியிலிருந்து நியூயோர்க் வரையுள்ள மக்கள் வானில் ஒரு அதிசய நெருப்புப் பந்தொன்றைக் கண்டனர். வானில் வேகமாகப் பறந்து சென்ற இந்நெருப்புப்பந்து இறுதியாக பீக்ஸ்கில்லிலுள்ள வாகனத் தரிப்பிடமொன்றில் பாரிய குழியை ஏற்படுத்திவிட்டு பூமியில்மோதி மறைந்தது. இது கூட ஒரு வால்வெள்ளி தான். அளவில் மிகச்சிறியதாயும் 27 இறாத்தல் நிறையுடையதாகவும் இருந்ததால் இதன் தாக்கம் பாரிய அளவில் இருக்கவில்லை. கெனற்றிக்கற்றிலும், அலபாமாவிலும் அண்மையில் வீழ்ந்த இவ்வகையான வால்வெள்ளிகள் கூட பாரிய சேதம் எதையும் ஏற்படுத்தவில்லை. காலத்திற்குக் காலம் இடையிடையே இவ்வகையான வால்வெள்ளிகள் பூமியில் மோதுவதுண்டென்ற போதிலும் அவை அளவில் சிறியதென்பதாலும் அனேகமாகக் கடலிலோ அல்லது மனித நடமாட்டமற்ற பகுதிகளிலுமே வீழ்வதாலும் இவை பாரிய பிரச்சனையாக இருக்கவில்லை.

'ஷுமேக்கர்- லேவி 9' (Shoemaker-Levy 9) என்பது ஒரு பாரிய வால்வெள்ளி. வானியலாளர்களினால் பரபரப்பாகக் கண்காணிக்கப்பட்ட வால்வெள்ளி. இவ்வால்வெள்ளி 1994ம் ஆண்டு ஜுப்பிற்றருடன் மோதி பாரிய தாக்கத்தை உண்டாக்கியது. (அது சரி யாரிந்த ஜுப்பிற்றர் என்று கேட்டுவிடாதீர்கள். ஜுப்பிற்றர் எமது கிரகத்தொகுதிக்குச் சொந்தமான ஒரு

'ஷுமேக்கர் லேவி 9' ஜுப்பிற்றருடன் மோதியபோது ஏற்பட்ட தாக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரகம்) இம்மோதலினால் ஏற்பட்ட விளைவானது; 65 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் பூமியில் நடந்த மோதலுக்கு இணையானது என நம்பப்படுகிறது. இவ்வால்வெள்ளி ஜுப்பிற்றருடன் மோதிய போது உண்டான தாக்கம் 10,000 ஹிரோஷிமா குண்டுகளுக்கு இணையானது எனக் கூறுகிறார்கள். 65 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்ற மோதல் தொடர்பாக விஞ்ஞானிகளுக்கு இருந்த பல கேள்விகளுக்கு இப்போது ஜுப்பிற்றரில் நடைபெற்ற மோதலின்பின்னர் விடைகிடைத்துள்ளது.

இப்போது ஏறக்குறைய 150 வால்வெள்ளிகளினுடைய பாதையை அவதானிக்கும் வானியலாளர்கள் இவை அநேகமாக பூமியை மிக அருகாகக் கடந்து செல்லலாம் அல்லது பூமியின் வான மண்டலத்தினுள் பிரவேசிக்கலாம் என எதிர்பார்க்கிறார்கள். ஒரு கிலோமீட்டருக்கு மேல் விட்டமுள்ள பூமியை அருகாகக் கடக்கக்கூடிய அனைத்து துணிக்கைகளையும் 'நாசா'வின் பிரத்தியேக அமைப்பொன்று கண்காணித்து வருகிறது. இவற்றின் பாதையை நோக்குமிடத்து; இவை அவ்வாறு பிரவேசித்தால் கூட பூமியில் பாரிய அழிவெதையும் ஏற்படுத்த மாட்டாது எனக்கருதப்படுகிறது. ஏனெனில் இவை அளவில் சிறியவை. அத்துடன் இவை மோதவிருக்கும் இடங்களும் அதிகமாக மனித நடமாட்டமில்லாத இடங்களாகவே இருக்கும். வரலாற்றைப் பார்க்கையில் இப்படியான வால்வெள்ளிகள் தொடர்ந்து வீழ்ந்து கொண்டே இருந்திருக்கின்றன எனினும் கடந்த 1000 வருடங்களில் பெருமளவில் மனிதர்கள் இவற்றால் கொல்லப்பட்டதாக சான்றுகள் எதுவும் போதியளவு இல்லை.

இம்மோதலானது நடைபெறும் பட்சத்தில் மனித நாகரிகத்தின் முடிவு அநேகமாக இதுவாகவே இருக்கும்.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட மற்றொரு ஆய்வில் கண்டுபிடிக்கப் பட்ட பாரிய வால்வெள்ளி ஒன்றின் பாதையானது விஞ்ஞானிகளைக் கலக்கத்தில் ஆழ்த்தியுள்ளது. இந்த வால்வெள்ளியானது பூமியை எட்டு மீட்டரிலிருந்து 20 கிலோமீட்டர் வித்தியாசத்தில் கடந்து செல்லலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. அந்த வகையில் அது கடந்து செல்லுமானால் அது பூமியின் மேல் மோதக்கூடிய சந்தர்ப்பம் அதிகமாகவே உள்ளது. சில வானியலாளரின் கருத்துப்படி இம்மோதலானது நடைபெறும் பட்சத்தில் மனித நாகரிகத்தின் முடிவு அநேகமாக இதுவாகவே இருக்கும். உலகில் வாழும் உயிரினங்களில் 95% மானவை இம்மோதலுடன் அழிந்துவிடும் என்று கூட எதிர்பார்க்கிறார்கள். சரி இம்மோதல் எப்போ நடைபெறும்? மிகச் சரியான தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை. சில மில்லியன் ஆண்டுகளுக்குப் பின்னர் என ஒரு சாராரும், சில ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னர் என ஒரு சாராரும் கூறுகிறார்கள். (அப்பாடா...... நாம் வாழும் காலத்தில் இல்லை) பல மில்லியன் ஆண்டுகளுக்கு ஒரு தடவையே இவ்வாறான மோதல்கள் இடம்பெற்றுள்ளன.

சூரியனிலிருந்து கிடைக்கும் சக்தியைப் பாவித்து இவ்வால்வெள்ளியின் பாதையை சிறிதளவு மாற்றிவிடவும் விஞ்ஞானிகள் முயற்சிப்பதாகக் கூடக்கூறப்படுகிறது. 65 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த K-T event இன் மூலமே மனிதன் தோன்றியதாகக்கூட ஒரு கோட்பாடு உண்டு. சில மில்லியன் ஆண்டுகளின் பின்னர் பூமி முற்றிலும் ஜீவராசிகள் இல்லாத இடமாக மாற ஏனைய கிரகங்களில் உயிர்கள் வாழ்ந்து கொண்டிருக்கலாம். அவைகூட பூமியில் முன்னர் உயிரினம் வாழ்ந்ததா என ஆய்வு செய்துகொண்டிருக்கலாம். அதற்கிடையே மனிதன் வாழப்போகும் ஒரு குறுகிய காலத்தில் எத்தனை வேறுபாடுகள்? எத்தனை யுத்தங்கள்?

*****

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6 Kumars

Silk House

(416) 465-7131



- ★ திருமண கூறைப்புடவை (Gold & Sliver)
- ★ Gowri, Gaythiri மைசூர் சில்க்,
- ★ காஸ்மீர் சில்க்
- ★ அபூர்வா முகூர்த்த சாறிகள்
- ★ Rangoli Silk
- ★ Copper Silk
- ★ தூயகாஞ்சிபுரம்
- ★ நூல் காஞ்சிபுரம்
- ★ தர்மாவரம்
- ★ மணிப்புரி
- ★ இளம் நங்கைகளுக்கான பஞ்சாபி சூட், லங்கா சூட், சாறிசூட்
- ★ மாப்பிள்ளைக்குத் தேவையான பட்டுவேட்டி சால்வை, சர்வாணிசூட்
- ★ அனைத்து வகையான எவர்சில்வர் பாத்திரங்கள், Dance Gold Covering நகைகள்.....

Redy made
Dance Costume Dress
சகல அளவுகளிலும்...

Citizen Watches for Ladies & Gents 5 Years World Wide Warranty

1394 Gerrard Street East, Toronto, ON., M4L 1Z4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரைவில்....

கனடிய தமிழ்ப் படைப்பாளிகள்
வழங்கும்

ஒரு ரோஜாவின்
போராட்டம்

CD இசைத்தட்டு

THAMIL CREATORS OF CANADA
F.P.P.O., P.O. Box 45593, 747 Donmills Road,
North York, ON., Canada. M3C 3S4
Tel: (416) 425-2884
Fax: (416) 425-2625

• எஸ். ராஜ்மோகன்

எனக்குத் தூக்கமே வரல்ல_

"நீ என்ன கொடுத்து வைத்தனி...... படுத்தவுடன் நித்திரை வந்திடும்."

"எவ்வளவு கஷ்டப்பட்டாலும் தூக்கமே.... வருகுதில்ல..... என்ன செய்யலாம்......."

என்று பலர் சொல்லிக் கவலைப்படுவதை அதிகளவில் கண்டிருப்போம். ஏன் இவர்களுக்கு இந்த கவலை..... எதற்காக இந்த உளைச்சல்...?

Insomnia என்றழைக்கப்படும் இந்த தூக்கமின்மைக்கு முழுக்காரணமும் ஒவ்வொருவரின் மனமே. மனதில் ஏற்படும் கவலைகள், போசனைகள், உளைச்சல்கள், (Tension) போன்ற பல காரணங்கள் இந்த தூக்கமின்னைக்கு காரணியாகின்றது.

இந்த அந்நிய தேசத்திலே ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு.... தலையிடி, பிரச்சனை, அதிக வேலை........ ஆனாலும் மனதை தெளிவுடனும் உறுதியுடனும் வைத்திருக்கும் எவரும் இந்த தூக்கமின்மையில் அவதியுற மாட்டார்கள்.

சிலர் படுக்கைக்குப் போகும் அன்று நடந்த விடயங்கள் அனைத்தையும் அசைபோடுவார்கள். நல்ல விடயம்..... ஆனால் அன்று நடந்த... சிறு சிறு சம்பவங்களில் நேர்ந்த... அவமானங்களையும் நஷ்டங்களையும் பெரிது படுத்தி.... நாளை என்ன செய்யலாம் என்று சிந்திப்பது தவறான ஒரு பழக்கம் இவர்கள் மனம் அன்று இரவு முழுவதும் அமைதியடையாது கறுவிக் கொண்டே இருக்கும்.... எப்படி இவர்களுக்கு நித்திரை வரும்.

எந்தவிதமான சம்பவங்கள் இடம்பெற்றாலும் படுக்கையில் மனதை இலேசாக வைத்திருக்கப் பழக வேண்டும். நடந்து முடிந்ததையோ... நடக்கவிருப்பதையோ சிந்திக்காமல் இலேசாக.... மெல்லிய உணர்வுகளுடன் உங்கள் சிந்தனைகளை படர விடுங்கள்....கப்..... நித்திரை. (சிந்தனைகளை கட்டுப்படுந்த முடியாவிடில்... படுக்கையில் மனதை இருந்து வெளியேறி..... சிந்தித்து விட்டு மீண்டும் மனித இலகுவாக்கி.... படுக்கைக்கு வாருங்கள். படுக்கை மனதை என்பது அமைதியான... கவலைகள் அற்ற தூய்மையான இடம் என்று கற்பனை செய்யுங்கள்.

"எனக்குப் பாட்டுக் கேக்காட்டி.... நித்திரை வராது...."

'சிலர் இரவு நேரத்தில் மெல்லிய இசையையோ அல்லது மென்மையான ராகத்தில் அமைந்த பாடங்களையோ கேட்டுக் கொண்டு நித்திரைக்கு செல்வரர்கள். தமது மனதை இலகுவாக்கி இசையினால் திசை திருப்பி தூக்கத்தை அணைக்கின்றார்கள் நல்ல முயற்சிகள்.'

நமக்கு தூக்கமின்னை ஒரு வியாதி என்று நினைத்து தமக்குள்ளேயே அவதியுறுகிறார்கள் பலர். தூக்கத்திற்காக தூக்க மாத்திரைகள் எடுத்துக் கொள்வது ஆரோக்கியமான விடயம் அல்ல. இது உங்கள் மனம் சம்மந்தப்பட்டது. உங்கள் மனத்தை கட்டுப்படுத்தும் திறமை உங்களுக்கு இருந்தால் தூக்கமின்மையை துரத்திடுவீர்.

எங்கே... மெல்லிய.... இந்த இரவில் ...தூக்கத்திற்கு ஆயத்தமா....?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கினி பதில்கள்

▣ 'ரோஜா' என்று உங்கள் சஞ்சிகைக்கு பெயர் சூட்டியதன் காரணம் என்ன...?

ரவி - ஸ்காபுரோ

● உங்களைப் போன்ற வாசக நெஞ்சங்களில் வாசம் வீசும் முயற்சியாக இருக்கலாம். பூக்களுக்கும் புத்தகங்களுக்கும் பலகால பந்தமல்லவா...? தாமரை, மல்லிகை.... ரோஜா.. என பட்டியல் நீள்கிறது.

▣ அறிவை வளர்த்துக் கொள்வது எப்படி?...

சுதன் - நோத் யோர்க்

● வாசியுங்கள்; புத்தகங்களையும், மனிதர்களையும். நல்லதை எடுத்துக் கொண்டு கெட்டதை ஒதுக்கி விடுங்கள்.

▣ சமீப காலங்களில் வெளிவரும் திரைப் படங்களில் கதைப் பஞ்சம் காணப்படுகிறதே! கவனித்தீர்களா....?

மாலினி - ஸ்காபுரோ

● கதைப்பஞ்சமென்றால் கூட.... பரவாயில்லை. பாட்டுக்களால் பசியாறலாம். ஆடைப்பஞ்சத்தை எப்படிப் போக்குவது..?

கேள்விகளை பதிவு செய்ய அழையுங்கள்
(416) 703-5689

▣ சமீபத்தில் கனடாவுக்கு விஜயம் செய்திருந்த சித்தார்த்தன் வானொலிக்கு அளித்த பேட்டி குறித்து என்ன நினைக்கிறீர்கள்?

பிரதீபன் - டொன்மில்ஸ்

● அர்த்தமில்லாத சித்தாந்தம்(ன்). கேள்விகள் எல்லாவற்றிற்கும் பதில் பட்பட்டென்று வருகிறது. ஆனால்..... தீர்வு? பதிலும் தீர்வும் ஒன்றாகாது.

▣ நல்ல நண்பர்களை இனம் காண்பது எப்படி?

மாகாலிங்கம் - ரொறன்ரோ

● நீங்கள் சிரிக்கும் போது சேர்ந்து சிரித்தால் மட்டும் போதாது அழும் போது சேர்ந்து அழுபவன்தான் நல்ல நண்பன்.

▣ எனது கணவர் வீட்டில் இருக்கிற நேரத்தை விட வெளியில் நண்பர்களுடன் செலவிடும் நேரமே அதிகமாக இருக்கிறது. அவரைத் திருத்த என்ன செய்வது?

யாழினி - ஸ்காபுரோ

● வீட்டில் கிடைக்காத ஒன்றை அவர் வெளியில் தேடுகிறார். நிம்மதி, சந்தோஷம், கலகலப்பான பேச்சு....... இவை வீட்டிலே கிடைத்தால்.......... கால்கள் வீட்டை நோக்கித் திரும்பவும்.

▣ வீட்டுப் பிரச்சனைகளை வெளியாருடன் பகிர்ந்து கொள்ளலாமா..?

நிரூபா - ஸ்காபுரோ

● இனம் அறிந்து இதம் தேடவும்! இல்லையெனில்... இருக்கிற சந்தோஷமும் வெளிநடப்புச் செய்து விடும். உங்கள் பிரச்சனைகளில் பாதிப் பேருக்கு அக்கறையில்லை. மீதிப்பேருக்கு அதில் சந்தோஷம். எனவே இனம் அறிந்து இதம் தேடவும்.

▣ எத்தனை வயதில் காதலிக்கலாம்......?

குமார் - மிசிஸாகா

● காதல் என்பது பருவம் பார்த்து விதைக்கிற நெல் இல்லை. தானாய் தலை நீட்டும் புல். அதற்குப் பருவம் கிடையாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

▣ தமிழர் புலம் பெயர்ந்து வாழும் கனடா போன்ற நாடுகளில் எடுத்ததற்கெல்லாம் சங்கம் அமைப்பவர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

நடேஷன் - ஸ்காபுரோ

- சங்கடங்கள்!

▣ எழுத்தாளராகும் ஆசை இருக்கிறது. ஆனால்... பேனாவைக் கையிலெடுத்ததும் எண்ணியதெல்லாம் எங்கோ ஓடி ஒளிந்து கொள்கிறது. அதைத் தேடிப் பிடிப்பது எப்படி....?

வீணா - டொன்மில்ஸ்

- முயற்சி, பயிற்சி ஆகிய இரண்டும் தான் வெற்றியின் விலாசங்கள்! ஒரு குழந்தை உடனே எழுந்து... பின் விழுந்து மெல்ல.... நடந்து..... எழுத்து நடையும் அப்படித்தான்.

▣ எங்கள் பையன்கள் சிலர் தமக்குப் பொருந்தாத அல்லது அளவில்லாத 'தொளதொளா' உடைகளுக்குள் புகுந்து கொள்வது பற்றி......

சுமதி - ரொறன்ரோ

- பெண்கள் குறைக்கிறார்கள். ஆண்கள் கூட்டுகிறார்கள். எந்தத் தாக்கத்திற்கும் எதிர்த்தாக்கம் உண்டு.

▣ தனிமை கொல்கிறது. என்ன செய்யலாம்?

சாந்தி - ஸ்காபுரோ

- தனிமையைக் கொல்லுங்கள்... வழியா இல்லை... வேலை, படிப்பு கலையார்வம்... இதில் எதை வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளுங்கள். தனிமையை அழித்து விடலாம்.

தரமான கேள்வியொன்றுக்கு பத்து டாலர்கள் பெறுமதியான பரிசுக் கூப்பன் காத்திருக்கிறது!

பெண்கள் குறைக்கிறார்கள்! ஆண்கள் கூட்டுகிறார்கள்.! எந்தத் தாக்கத்துக்கும் எதிர்த்தாக்கம் உண்டு.

▣ வளரும் இளைய தலைமுறையைத் தட்டிக் கொடுக்காமல் தடையாய் நிற்கும் சில பெரியவர்களைப்பற்றி.....

கலைமகள் - ஸ்காபுரோ

- அவர்கள் பெரியவர்களல்ல; சிறியவர்கள்; பழுத்த இலைகள் தலை நீட்டும் தளிர் களுக்கு இடம் விட்டே ஆக வேண்டும். இயற்கைக்குத் தெரிகிறது. இவர்களுக்கு?...

▣ எழுத்தினால் ஒரு சமுதாயத்தைச் சீர்திருத்த முடியுமா?

உதயன் - ரொறன்ரோ

- முடியும்! முழுதாக அல்ல; கொஞ்சம் கொஞ்சமாக.... எழுதுகோல் என்பது சத்தியத்தின் ஆயுதம்.... அது தோற்பது கிடையாது.

▣ புதுக்கவிதை, மரபுக்கவிதை இரண்டில் சிறந்தது எது...?

துளசி - ஸ்காபுரோ

- மரபுக்கவிதைகள்
  மண்ணில் இருந்தாலும்
  விண்ணையே பார்த்துக் கொண்டிருக்கும்
  மலர் வர்க்கங்கள்...!

  புதுக்கவிதைகளோ...
  விண்ணிலிருந்தாலும்....
  மண்ணையே பார்த்துக்கொண்டிருக்கும்
  சூரிய சந்திரர்கள்!

என்கிறார் கவிஞர் வைரமுத்து. இரண்டில் எது சிறந்ததென்று நீங்களே சொல்லுங்களேன்.

★★★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களின் நாட்கள்

• விவேக்

அஸ்தமனத்தை
அறிவிக்கும்
எங்கள்
அதிகாலைகள்
பூபாளத்திற்கு பதிலாக
முகாரியையே
முன்வைக்கும்.

பூமியில் கேட்கும்
முழக்கங்களால்
மேகங்கள்
மோதிக்கொள்வதை
நிறுத்தி
வாய்பொத்தி
நிற்கும்.

துரத்திக்கொண்டுவரும்
துப்பாக்கி ரவைகளால்
தென்றல் காற்று
கிழிபடும்..

'ஷெல்'லக்குழந்தைகள்
மனித பொம்மைகளின்
அங்கங்களை
கழற்றி விளையாடும்,

பொட்டிழந்த
எங்கள்
பெண்ணிலவுகளை
சோக மேகங்கள்
ஆக்கிரமித்துக்கொள்ள
அமாவாசை
அவர்களிடம்
நிரந்தரமாகும்.

குருதியலைகள்
மோதிப் பாய்ந்து
கீழ்வானை
சிகப்பாக்கும்.

('தடயங்கள்'
கவிதைத் தொகுப்பிலிருந்து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமறா கோப்பிகளும் தெளிவற்ற தேடல்களும்

• ஜாப்ஸார்

ரொறன்ரோ தமிழர்கள் மத்தியில் இன்று அடிக்கடி கேட்கும் வசனங்கள் இவைதான். பலர் சின்னத்திரையில் தெரியும் சில கோடுகளுக்கும், இனந்தெரியாத புள்ளிகளுக்கும் இடையில் நக்மாவுக்கும் ரம்பாவுக்கும் வித்தியாசங்களை சுலபமாகக் கண்டுபிடிக்கும் கெட்டிக்காரர்கள்...!

"இந்த திரைப்படத்தின் கதாநாயகன் T.R. மகாலிங்கமா? சிவாஜி கணேசனா? அல்லது ரஜனிகாந்தா?... கண்டுபிடிப்பவர்களுக்கு ஒரு பூதக்கண்ணாடி பரிசாக வழங்கப்படும்!"

"இந்தக்கொப்பியில பாருங்கோ அரைவாசிக்கு மேல நீலப்படம் தான் தெரியுது?!"

(வித்தியாசமாக இல்லை..... Blue screen)

ரொறன்ரோவில் பத்து வீதமான மக்கள் மாத்திரமே தெளிவான மற்றும் தொழில் நுட்ப நயத்துடன் கூடிய ரசனைக்கு முக்கியத்துவம் கொடுத்து தியேட்டர்களிலும் ஒரிஜினல் வீடியோ பிரதிகளிலும் படங்களைப் பார்க்கிறார்கள்.

இந்தப் பிரச்சினைகளுக்கு காரணம் என்ன?......... (ம்... கமராக் கொப்பியில் படம் பார்ப்பதுதான் தலையிடியெண்டால்.... இதன்காரணத்தை ஆராய்வதோ.... ஐயோ ஆளை விடுங்கையா)

சினிமாத் தியேட்டர்களில் படம்வந்து அதன் வரவேற்பைப் பொறுத்தே ஒரிஜினல் வீடியோப்பிரதிகள் விநியோகிக்கப்படுகின்றன. இது ஒரு கிழமையாகவோ ஒரு மாதமாகவோ இருக்கலாம். அதுவரை பொறுத்திருக்காதவர்களுக்கே........ இந்தக் கமராக்கொப்பி.

இந்த பிரச்சினைக்கு என்ன காரணம் என்பதை அறிய முனைந்ததில் கிடைத்த சில தகவல்கள்......

ரவுண்ட் அப்

ஸ்காபரோவைச் சேர்ந்த குடும்பத்தலைவி ஜெயந்தி (30) சலிப்புடன் கூறுகிறார்;
"என்ன கொப்பியள் தாறாங்கள்..... என்ன செய்வது....... அப்பாட்மெண்டில நாலுபேர் கதைக்கேக்க தியேட்டரில புதுப்படம்பாத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதிரிச் சொல்ல வேணும்தானே..... இல்லையா..... அதுக்காகத் தான் நான் கமராக்கொப்பியில படம் பாக்கிறனான். பகலிலை இவர் வேலைக்குப் போனாப் பிறகு சும்மா தான் வீட்டை இருக்கிறனான். ரெலிபோனில எவ்வளவு நேரம் கதைக் கிறது... ம்...... அதுக்குப்பிறகு வேறென்ன படம்தானே"

உணவகம் ஒன்றில் பணிபுரியும் நோர்த் யோர்க்கைச் சேர்ந்த கண்ணன் (30) தொழில்நுட்ப ரசனையுடன் கூறுகிறார்;

"மணிரத்னம், பி.ஸி. ஸ்ரீராம், சந்தோஷ்சிவன், ராஜீவ்மேனன் போன்ற சிறந்த ஒளிப்பதி வாளர்கள் கமராக்களுள் செய்யும் விந்தைகளை கமராக் கொப்பிகளில் இனங்காணமுடியாதுள்ளது. நடிகர்களின் முகத்தினூடாக உணர்வுகளை வெளிப் படுத்துவதை விட ஒளிப்பதிவு முறைகளி னூடாகவே பல விடயங்களை இவர்கள் வெளிக்கொணர்கிறார்கள். இவர்களது ஒளிப்பதிவு முறை ஹொலிவுட்டிற்கு நிகரா யிருக்கும் போது எம்மில் பலர் கமராக் கொப்பியில் படங்களைப் பார்ப்பதால் இவற்றைத் தவறவிட்டு விடுகிறார்கள்."

பார்லிமென்ற்/வெலஸ்லி பகுதியில் வசிக்கும் ராசம்மா ராசரத்தினத்துடன் (65) பேசிய போது.........

"எனக்கு இந்தக் கடைக்காரர் தாற கொப்பியள்ள படம்பாத்தா அரைவாசி தலையிடி தான் தம்பி. என்ன செய்யிறது வின்ரர் குளிர்...... வெளிக்கிட முடியிற தில்லை. என் தலையெழுத்து மகன் கூப்பிட்டு விட்டான். ம்.... இந்தக் கமராக் கொப்பியப் பாத்துப் பாத்து கண்கெட்டது தான் மிச்சம்."

டொன்மில்ஸைச் சேர்ந்த பெயர்குறிப்பிட விரும்பாத கல்லூரி மாணவியிடம் கமராக் கொப்பி பற்றி கேட்டபோது சிரித்தபடி கூறினார்;

"நான் எல்லாப் படமும் பார்ப்பதில்லை. நல்ல Directors இனுடைய சில படங் களைத்தான் Select பண்ணி பாக்கிறனான். எத்தனை நாள் போனாலும் பொறுத் திருந்து ஒரிஜினல் கொப்பியில் தான் படம்பார்ப்பேன். என்னைப் பொறுத்தவரை படமும் ஒரு கலைதான். அதைரசிச்சு அனுபவிச்சுப் பார்க்கவேணும். இப்ப.... உதாரணத்துக்கு ஒரு soap opera வைப் பாக்கேக்க இருக்கிற Clear, Quality, Sound எல்லாம் தமிழ்ப் படத்திலையும் இருக்கோணும். பொதுவா தியேட்டருக்குப் போய்ப் பார்ப்பதே சிறந்தது. எனக்கு அதுக்கெல்லாம் நேரம் கிடைக்கிற தில்லை....." (O.Kயா என்று கூறியபடி தனது Honda Civic காரை நோக்கி விரைந்தார்.)

மேலும் இத்துறையுடன் சம்பந்தப்பட்டவர் களுடன் பேசியபோது கிடைத்தவை.

நியூயோர்க் பல்கலைக்கழகத்தில் கணனி

திடுக்கிடும் தகவல்

ஸ்காபரோவில் உள்ள பலசரக்கு கடையொன்றினுள் அமைந்துள்ள வீடியோ நிறுவனம் ஒன்று கடந்த இரண்டு வருடங்களாக புதிதாக வீடியோக் கஸெட்டுகள் எதையுமே வாங்கவில்லை. பதிலாக ஏற்கனவே இருக்கும் கஸெட்டுகளிலேயே திரும்பத் திரும்ப பதிவு செய்து மக்களுக்கு வாடகைக்குக் கொடுப்பது தெரியவந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யியல் கூடத்தில் Administrator ஆகக் கடமைபுரிபவரும் வீடியோத் துறையில் தொழில்நுட்ப அனுபவமுள்ளவருமான ஞான ஆனந்தன் கமராக் கொப்பிகளின் தரம் பற்றி விளக்கம் தருகையில்.....

"ஒரு சாதாரண தரம்மிக்க வீடியோப் பிரதியில் இரண்டு அல்லது மூன்று தடவைகள் மட்டுமே சிறப்பாக ஒளிப்பதிவு செய்ய முடியும். அப்படி செய்யும்போது கூட 20 - 25%மான ஒளிப்பதிவுத்தரம் (Quality) ஒவ்வொரு பதிவிலும் குறைந்து கொண்டே செல்லுகிறது. அத்துடன் ஒரு வீடியோப்பிரதி எத்தனை தடவை VCR இல் பயன்படுத்தப்படுகிறது என்பதிலும் அதன் தரம் தங்கியுள்ளது. திரைப் படத்தின் Copyright உள்ளவர்கள் திரைச் சுருளை Convert பண்ணும்போது தமது மூலப் பிரதியை ஒரு அங்குல வீடியோவில் பதிவு செய்து அதன்பின்னர் சாதாரண வீடியோ விற்கு பிரதிமாற்றம் செய்யும்போது பெருமள விற்கு ஒளிப்பதிவுத்தரம் பேணப்படுகிறது. அதனாலேயே ஆங்கிலப் பிரதிகள் மிகத் தெளிவானதாகக் காணப்படுகிறது. அத்துடன் திரைப்படச் சுருளிலிருந்து சிறந்த தொழில் நுட்ப கருவிகள் மூலம் Convert பண்ணாது விடில் ஆகக்கூடுதலாக 10%மான தரத்தை மட்டுமே பெறமுடியும். அதை விநியோகிப் பவர்கள் மீண்டும் அதைப் பிரதி பண்ணும் போது அதன் தரத்தைப்பற்றி.... சொல்லவே தேவையில்லை."

ஒளிப்பதிவுத்துறையில் நீண்ட அனுபவ முடைய வீடியோக் கலைஞரான சுந்தரிடம் இதுபற்றி வினவியபோது.....

"வீடியோ திரைப்பட விநியோகஸ்தர்கள் Master Copyயை மற்றைய வர்த்தக நிலையங்களுக்கு விநியோகிக்கும்போது அநேகமாக LP Speedஇல் ஒளிப்பதிவு செய்து விநியோகிக்கிறார்கள். இது ஒரு தரமிக்க ஒளிப்பதிவு Speed அல்ல. ஆகக்கூடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஒரு சாதாரண வீடியோ கஸெட்டில் இரண்டு அல்லது மூன்று தடவைகள் மட்டுமே ஓரளவு..... தெளிவான படங்களைப் பதிவு செய்யலாம்."

ஞான ஆனந்தன்
(நியூயோர்க் பல்கலைக்கழக கணனியியல் பீடம்)

எச்சரிக்கை!...

கறுப்புச் சந்தைகளில் வாங்கப்படும் தரங்குறைந்த வீடியோ கஸெட்டுகள் சில இடங்களில் பாவனையிலுள்ளதால் VCRகளின் செயல்திறன் குறைந்து.....
(VCRகளின் வேக மாற்றம் பாதிப்படைந்து வீடியோ நாடாக்கள் சிக்குப்படுகின்றன.)
இறுதியில் பழுதடைவது தெரியவந்துள்ளது.

தலான தரம் SP Speed ஒளிப்பதிவிலேயே கிடைக்கிறது. ஆனால் தமிழ்ப்படங்கள் இரண்டு மணித்தியாலங்களுக்கு மேற்பட்டவை. எனவே விநியோகஸ்தர்கள் 120க்குப் பதிலாக 160 அளவுள்ள பிரதிகளைப் பாவித்து SP Speedஇல் Master Copyகளை ஒளிப்பதிவு செய்வது அவசியமாகிறது. இரண்டு வீடியோப்பிரதிகளுக்கும் பெரிய அளவில் விலை வித்தியாசம் இல்லை. அத்துடன் பிரதிகளைப்பதிவு செய்பவர்கள் கட்டாயமாக அந்த பிரதிப்பதிவு முடியும் வரை அருகிலிருந்து அவதானிக்க வேண்டும். இந்த அசட்டைத்தனத்தினால் Tracking மாறி படத்தைப் பார்ப்பவர்களுக்கு தலையிடியை ஏற்படுத்துகிறது."

பிரபல சட்டத்தரணி நாதன் ஸ்ரீதரன் கூறுகிறார்;

"ஆங்கிலத் திரைப்படங்கள் சட்டவிதிமுறைகளுக்குஅமையவே வெளிவருகின்றன. இதனால் கலைஞர்களும் மக்களும் பெருநன்மை அடைகிறார்கள். Copyright என்பது International Law. ஆனால் எங்கள் திரைப்பட விநியோகஸ்தர்களுக்கு இதுபற்றிய அறிமுகமே இல்லை........ ஒற்றுமையுடன் இங்குள்ள வீடியோ விநியோகஸ்தர்கள் சிந்தித்தால் தரம்மிக்க வீடியோப்பிரதிகளைப் பார்ப்பதற்கு வழிவகுக்கலாம்..... (சிரித்துக் கொண்டே... தமிழருக்கும் ஒற்றுமைக்கும்..... தெரியும்தானே....?) கடந்தகாலங்களில் ஒருசில கமராக் கொப்பிகளின் விநியோகஸ்தர்கள் கண்டுபிடிக்கப்பட்டு சட்டரீதியாக தண்டனையும் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் ஒவ்வொரு வீடியோப் பிரதிக்கும் இது போன்ற சட்ட நடவடிக்கை எடுப்பது செயல்முறைக்கு கடினமான விடயம்.

*****

'ரோஜா'வின் மாணவர்களுக்கான இலக்கிய போட்டிகள்.

விபரங்கள்
'விடுதலை முரசு'
ஜனவரி இதழில்
அல்லது
(416) 425-2884.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர் பூங்கா

இம்மாத

நம்பிக்கை நற்சித்திரம்



கார்முகன் பாலராஜ்

"ஒழுக்கத்தையும் கல்வியையும் தேடிக்கொள்வதே சிறந்தது" என்று எண்ணுகிறேன்.

என் பெயர் கார்முகன். எனது பிறந்த இடம் மானிப்பாய். வளருமிடம் கனடா. எனது தாயாரின் பெயர் சரஸ்வதி, தந்தையின் பெயர் பாலராசா. நான் இப்போது John XXIII கத்தோலிக்க பாடசாலையில் கல்வி கற்று வருகின்றேன். ஆண்டு ஏழு வரை எனக்குப் படிப்பில் கவனம் இருப்பதில்லை. குறும்புகள் செய்து திரிவேன். இதையிட்டு எனது தாய் தந்தையர் மிகவும் கவலையடைவார்கள். இதை நான் புரிந்து கொண்டு படிப்பில் கவனம் செலுத்தினேன்.

இந்தச் சந்தர்ப்பத்தில் செல்வராசா ஆசிரியரும், அவரது துணைவியாரும் எனக்குக் குருவாய் கிடைத்தார்கள். அவர்கள் இருவரும் எனக்குப் போதியளவு கல்வியையும், புத்திமதியையும், அன்பையும் எனக்குத் தந்து நல்வழிப் படுத்தினார்கள். அவர்களின் கருணையால் எனக்கு கல்வியில் ஆசையும் வந்தது. இப்போ நன்றாகப் படிக்கின்றேன். பாடங்களுக்கு நல்ல புள்ளிகளும் பெற்றுக் கொண்டேன். Basketball, Volleyball இப்படியான விளையாட்டுக்களை விளையாடுவதில் எனக்கு ஆர்வம் உண்டு. இக்காரணத்தால் வேறு பாடசாலைகளிலும் விளையாடும் சந்தர்ப்பம் கிடைத்தது. நான் கல்வியில் நல்ல வளர்ச்சி அடைய எனக்கு குருவாய் அமைந்த ஆசிரியர்களுக்கு எனது நன்றிகள். நான் தொடர்ந்தும் படித்து நல்ல நிலைக்கு வர கடவுள் துணையும் கிடைக்க வேண்டும். எனது தாய் தந்தையர் அடிக்கடி சொல்வார்கள் ஒழுக்கம் தான் உயர்கல்வி என்று. எனவே எனது தாய் தந்தையாரை நான் சந்தோஷப்படுத்த வேண்டுமாயின் ஒழுக்கத்தையும் கல்வியையும் நான் தேடிக் கொள்வதே சிறந்தது என்று எண்ணுகிறேன். 'ரோஜா' சஞ்சிகையில் எனக்கு இடம் தந்தமைக்காக அதன் ஆசிரியருக்கு எனது நன்றிகளை தெரிவிக்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருபத்தோராம் நூற்றாண்டில் எங்கள் தமிழ் மொழி வாழிய வாழியவே!.....

• வீணைமைந்தன்

ஈழமக்களின்
தமிழ் சுவாசம்
அலை கடந்து
இடைவெளி
மலை கடந்து
ஆகாச
எல்லைகளைக்
கடந்து
எங்கும் தமிழ் மணம்
பரப்பியது.

என் இனிய 'ரோஜா'வின் வாசகர்களே! வணக்கம்! புதியதொரு வருடத்தின் நுழை வாயிலில் உங்களைத் தமிழ-ன்புடன் வரவேற்கிறேன்; வாழ்த்து கிறேன். இன்னும் மூன்று ஆண்டுகளைக் கடந்தோமானால் இருபத்தியோராம் நூற்றாண்டின் முதலாவது படிக்கட்டில் காலடி வைத்திடுவோம்.

'எங்கள் தமிழ் மொழி! எங்கள் தமிழ் மொழி என்றென்றும் வாழியவே' என்று தமிழ்மொழி வாழ்த்துப்பாடுவதுடன் எங்கள் மொழியுணர்வு முகங்காட்டு வதுடன் முடிவடைந்து விடவில்லை!

எண்பதுகளுக்குப் பின்பு தான் பூமி உருண்டையின் பிரதேசங்களில் வீசி வரும் காற்றுடன் 'எங்கள் தமிழ் மொழியும்' கலந்து சுகந்தமானது.

என் இனிய தமிழ் ஈழமக்களின் தமிழ் சுவாசம் அலை கடந்து இடைவெளி மலை கடந்து ஆகாச எல்லைகளைக் கடந்து எங்கும் தமிழ் மணம் பரப்பியது.

எமது தாயக மக்களின் பரந்துபட்ட குடிவரவிற்குப் பின்தான் தமிழகக் கலைஞர்களினது வருகை அதிகரித்தது; வருவாயும் அதிகரித்து அவர்கள் பைகளை நிரப்பியது.

தமிழக வாராந்தர சஞ்சிகைகள் - பத்திரிகைகள் எமது மக்களிடையே வியாபாரமாக்கப்பட - தமிழகப் பத்திரிகை வியாபாரிகளுக்கு அந்நியச் செலவாணி (வெளிநாட்டுப் பணம்) அதிகளவில் உயர்ந்தது.

அதாவது உலகளாவிய ரீதியில் வாழும் எமது சொந்தங்களின் உழைப்பு தமிழகப் பத்திரிகைகள் விற்பனைக்கு உரமாயிற்று! தமிழ் ஈழத்தில் தமிழக இறக்குமதிக்குத் தடை விதித்த காலத்தில் எமது கலை முயற்சிகள் எவ்வளவு தரமாக வளர்ந்தன, உயர்ந்தன என்றும் இந் நேரத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைத்துப் பாருங்கள். அதேபோல் தமிழகக் கலை இலக்கிய இறக்குமதிகள் வெளிநாடுகளில் தற்காலிகமாகத் தடை செய்யபடுமேயானால் அங்குள்ளவர்களின் (கஜானாக்கள்) பணப்பெட்டிகள் சுருங்கிவிடும்.

இதை ஏன் குறிப்பிடுகிறேன் என்றால் 'இருபத்தியோராம்' நூற்றாண்டுத் தமிழிலக்கியத்தைப் பற்றி இலங்கை எழுத்தாளர் எஸ். பொன்னுத்துரை அவர்கள் தமிழ் நாட்டில் கருத்தரங்கில் கூறிய கூற்றுக்கு மறுப்புத் தெரிவித்து 'குமுதம் இதழ்' கூப்பாடு போட்டதுமல்லாமல் - எமது தமிழ் உணர்வை எள்ளி நகையாடியுமுள்ளது. (பார்க்க 26.9.96 - குமுதம் அரசு பதில்கள்) எங்களிடத்து மொழியுணர்வு குறைந்து விடும் என்று குமுதம் கணக்குப் பார்க்குமேயானால் குமுதத்தின் (அது போன்ற ஏனைய இதழ்களினதும்) வருவாயும் அல்லவா குறைந்து விடும்.

தமிழ் ஈழமக்களின் மொழிப்பற்று - இலக்கிய ஆர்வம் குறைந்து விடவேண்டும்; அழிந்து விடவேண்டும் என்று எவ்வளவு அக்கறை குமுதத்திற்கு! அப்படியொரு ஆசையால் கேட்ட கேள்விக்கு (தயாரிக்கப்பட்ட கேள்வி) இந்த வாரத்தின் சிறந்த கேள்வியென நானூறு ரூபா பெறுமதியான பரிசுகள் வேறு வழங்கபபட்டன!'

எனவே தான் என் இனிய கனடிய (மற்றைய நாடுகளில் வாழும் சொந்தங்களே) தமிழ் எழுத்தாளர்களே......... இலக்கிய ஆர்வலர்களே! '............தெரியாமல் தான் கேட்கிறேன். புலம் பெயர்ந்த இலங்கைத் தமிழர்களில் எத்தனை பேர், வரும் இருபத்தியோராம் நூற்றாண்டில் தமிழ் பேச - எழுதப் போகிறார்கள்......' என்று குமுதம் சார்பாகப் பதில் சவால் விடும் 'அரசுகளின்' ஆணவம் அழிக்கப்பட வேண்டும். 'என்றந்தப் பேதை உரைத்தான்' - ஆ! இந்த வசை (எனக்) எமக்கெய்திடலாமோ....! எனத் தன்மானமிக்க பாரதியின் மூச்சுப் போல்...... பேச்சுப் போல்..... எழுத்துப் போல் இங்கு வாழக்கூடிய......... எழுத்தாளர்களே! இளைய ஈழத் தம்பிகளே! (எங்கள் தமிழ் மொழி....... எங்கள் தமிழ் மொழி என்றென்றும் வாழும் அது எங்களால் தான் வாழும்........... இருபத்தியோராம் நூற்றாண்டைக் கடந்தும் - இலங்கை எழுத்தாளர்களால் தான்...... தமிழ் ஈழ இலக்கியச் செல்வர்களால் தான்...... இளைய தலை முறையினரால் தான்...... வாழும்........... வாழ வைப்போம் என்று சூளுரைத்திடுவோம்.

வாருங்கள்!

ஜனவரி 1997
இதழின்
சிறப்பாசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முல்லைக்குத் தேரானான்

• கே. பி



முல்லைக்குத் தேரானான்
சிறுகதை எழுத்தாளர்
'கே. பி' மொன்றியல்

'கே. பி' - கே.பி. லிங்கம் எனும் பெயருடன் அவ்வப் போது அபூர்வமாக எழுதும் பொது உடைமைச் சிந்தனையாளர் இவர் தமிழ் ஈழம் கம்பர் மலைக் கிராமத்தின் இலக்கிய முற்போக்கு வாதி! இவருடைய எழுத்துக்கள் கனடாவில் 'தாயகம் இதழிலும் - அவுஸ்திரேலியா 'அக்கினிக் குஞ்சு' - டென்மார்க் 'சிரஞ்சீவி' ஆகிய இதழ்களில் பிரசுரமானது!

'ஒரு சுயீங்கம் இருந்தால்...' (கியூபா பயண நினைவுகளை) எனும் தலைப்பில் இவர் எழுதிய பயணக் கட்டுரை வீரகேசரியில் பிரசுரமானது! 'ரோஜா' இதழின் தொடர் வாசகரும் - ஆதரவாளருமான இவ்விலக்கியத் தமிழரின் தாய் மண் பற்று இச் சிறுகதையின் மூலம் வெளிப்படுகிறது.

சந்திரிக்கா அரசின் போர் நிறுத்த ஒப்பந்தம் வசந்தனுக்கு பதின் மூன்று வருடங்களுக்கு பின்னர் ஊருக்கு போவதற்கு சாதகமாகி விட்டது. பதின்மூன்று வருடங்கள் கொஞ்ச காலமல்ல. அப்பாடா எண்ணிபார்க்க அவனுக்கே புதுமையாயிருந்தது. வானத்தில் பறந்து கொண்டிருந்தவனுக்கு ஊரை எண்ணி எண்ணி மனதுக்குள் கிளுகிளுப்பு. வயல் வெளிகள் பச்சை பசேலென்ற தோட்டங்கள், மாலை வேளையில் கூடியிருந்த கிணற்றுக் கட்டுக்கள், மதகுகள், அப்பாடா எவ்வளவு இயற்கைகளை பிரிந்து வாழ்ந்துவிட்டேன். விமானம் பறந்து கொண்டிருந்தது. அதன் ஒலியைவிட வேறு ஒன்றும் அவன் காதில் விழ வில்லை. அம்மா, ஐயா, அக்கா.... அத்தான்.... இவர்களுடன் மருமக்கள்...... இப்போது இவர்கள் இருபது வயதைத் தாண்டிவிட்டார்கள். விமானத்தின் வேகத்தை விட மனவேகம் துரிதமாக ஓடிக்கொண்டிருந்தது.

நீண்ட பயணம்.........,
கட்டுநாயக்கா விமான நிலையம் வெளியே வந்ததும் முட்கள் மீது நடப்பது போல ஓர் உணர்வு. எங்கும் ராணுவ மயம், புதியவர்கள் சந்தேகப்பார்வை. 'கனடியன் பாஸ் போட்' ஒரு அளவிற்கு காப்பாற்றியது. இருந்தாலும் மனதிற்குள் ஒருவித பயம். மைத்துனர் தோளைத்தட்டியதும் திரும்பியவன் பேசாது நின்றான். எப்படி செழிப்பாக இருந்த நீங்கள் ஏன் இந்தக் கோலம்! என்ன செய்யிறது எல்லாம் காலம் செய்த கோலங்கள். நான் ஒரு அளவிற்குப் பரவாயில்லை. ஊருக்கு வந்து பாரன் எல்லாம் புரியும். நாசூக்காக சொன்ன பதிலால் வாயடைத்துப் போய் விட்டான் வசந்தன். காண்கின்ற ஒவ்வொரு வரும் ஒருவித பய பீதியுடன் வாழ்வதாகப் புரிந்து கொண்டான். யாரிடம் எதை கதைக்க வேண்டும், கூடாதென்பதில் ஒரு தடுமாற்றம். அவ்வளவுக்கு எல்லோருக்கும் சந்தேகங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாண்டிக்குளத்தைத் தாண்டி ஊருக்கு வந்துவிட்டான். வசந்தனுக்கு எல்லாம் புதுமையாகவே தென்பட்டது. காண்பவர்கள் எல்லாம் நிம்மதியை தொலைத்து விட்டு முகம் தெரியாத மனிதர்களாகி விட்டனர்; போர் சூழல் எல்லோரையும் மாற்றி விட்டது. வாழ்க்கையின் அடிமட்டத்திற்கு மக்கள் வந்து விட்டார்கள் என்று மாத்திரம் அவனால் உறுதியாக உணர முடிந்தது. என்ன கொடுமையான வாழ்க்கை. ஒரு அந்நிய நாட்டில் நாம் எவ்வளவு சுதந்திரமாக வாழ்கின்றோம். ஆனால் இங்கே.............. வீடு தேடி வந்தவர்களுக்கு அள்ளிக் கொடுக்க மனமிருந்தும் கிள்ளிக் கொடுக்கத்தான் முடிந்தது. பணம்..... பணம். தனி ஒருவரால் எத்தனைப் பேரை திருப்திப்படுத்த முடியும்?

வந்து ஒரு கிழமையாகி விட்டது. வெளியே போய் வந்தான் அழகாக நின்ற பனை மரங்கள் தலைகள் பல சீவப்பட்டு முண்டமாகக் காட்சியளித்தன, அழகான வீடுகளும் பாடசாலைகளும் அங்கில்லை. குண்டு வீச்சாலும், ஷெல் வீழ்ச்சியாலும் சின்னா பின்னமாகி விட்டது. தான் ஓடி விளையாடிய தோட்டங்கள், புளுதியாகிக் கிடந்தது. எங்கே இதன் பொலிவுகள்! எங்கே இதன் பசுமைகள்! எங்கே போனது எம் கிராமத்து சந்தோஷங்கள்? என் நண்பர்கள் எல்லாம் எங்கே? அவனை அறியாது மனம் கேள்வி கேட்டுக் கொண்டேயிருந்தது. கைகளையும் கால்களையும் இழந்தவர்களைப் பார்ப்பதற்காகவா இங்கே வந்தேன். தனிமையாக கிணற்றுக்கட்டில் இருந்து கொண்டு அழத் தொடங்கி விட்டான்.

இரவு வந்து படுத்த அவனால் நிம்மதியாக நித்திரை கொள்ள முடியவில்லை. அன்று முழுவதும் வெளியே போக மனமில்லை.

நண்பகல் மூன்று மணியிருக்கும் வெயில் வெழுத்துக் கொண்டிருந்தது. தூரத்தே ஒரு பெரிய சுமை விறகுடன் சயிக்கிள் ஒன்று வந்து நின்றது.
'அக்கா விறகு முத்தத்திலே போடவோ'......?
"ஓம்"...... தம்பி விறகு போடும் சத்தம் கேட்டது. பிள்ளை அந்த பாபுவுக்கு முன் நூறு ரூபா காசு கொண்டு போய் கொடு. களைச்சுப் போய் வருது. அவள் காசையும் தண்ணீரையும் கொண்டு போய்க் கொடுத்தாள். சரியான தாகம் மள மள வென்று குடித்து தள்ளினான்.

"தம்பி!...... பாபு வசந்தன் வந்திட்டான் தெரியுமே.....! "ஆர் வசந்தனோ....! ஒருக்கால் கூப்பிடுங்கோ பாப்பம்!"
அவன் கூனிக் குறிகிச் சொன்னான்.

வெளியே வந்த வசந்தனால் பாபுவை அடையாளம் காணமுடியவில்லை. என்னுடைய வயதல்லவா இவனுக்கு! தலை மயிரும் தாடியும் நரைத்து முகம் சுருங்கி, கண்கள் உள்போய், உடல் மெலிந்த இவனா பாபு?... ஆண்டவா இது என்ன சோதனை.

"பாபு! நான் வசந்தன்; என்ன கோலம் இது? நீ ஏன்ரா இப்படி போய் விட்டாய்? உனக்கு என்ன நடந்தது? சொல்லன்ரா".....?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனது கண்களால் பாய்ந்தோடிய கண்ணீர் வேர்த்துப் போயிருந்த உடலை மேலும் ஈரமாக்கியது.

"வாழ்க்கையில் நான் இழக்கக் கூடாத அத்தனையும் இழந்து விட்டேன். அப்பா, அத்தான் வடமராட்சிப் பிரச்சனையில் கொல்லப்பட்டு விட்டார்கள். அம்மா அக்கா பிள்ளைகள் தங்கச்சி எல்லாப் பொறுப்பும் என்னின் மேல். கனடாவுக்கு வர ஒருத்தனிடம் காணி நகைகள் விற்று நாலு லட்சம் கொடுத்தேன். ஆளும் இல்லை, பணமும் இல்லை. எனக்கு கல்யாணமும் இல்லை. இந்த லட்சணத்தில் விறகு வெட்டி விற்று குடும்பத்தைப் பார்த்து தங்கச்சிக்கும் கல்யாணம் செய்து வைக்கலாமா? சொல்லு. ஏதோ நாங்கள் உயிர் வாழ வேண்டும் என்பதற்காக உழைக்க வேண்டியுள்ளது." மீண்டும் அழுதான். அழுதது அவனது மனதுக்கு ஒரு ஆறுதலாக இருந்திருக்க வேண்டும்.

"அப்ப தங்கச்சி!"

"நல்லா படி படி என்று படிச்சுப்போட்டு வீட்டோடை தான். சரி வசந்தன் நேரமாகுது நான் நேரம் கிடைச்சால் ஒருக்கால் வருவன் என்ன!.." அவன் சயிக்கிளை எடுத்துக் கொண்டு போவது மாத்திரம் வசந்தனால் உணர முடிந்தது.

இரண்டு கல்யாணப் பேச்சுக்கள் வந்து வசந்தன் நிராகரித்து விட்டான். தன் வாழ்கையின் எதிர்காலத்தை தானே நிர்ண யிக்கத் துணிந்து விட்டான். அதிகாலை ஆறு மணியிருக்கும் பாபுவின் வீட்டு முற்றத்தில் வசந்தன், அப்போது விறகு வெட்ட தயாராகிக் கொண்டிருந்த பாபுவிற்கு வசந்தனின் வருகை ஆச்சரியமாகவே இருந்தது.

"என்ன வசந்தன் காலமை இந்தப்பக்கம் ஏதும் உனக்கு விஷேசமோ!"

"இனித்தான் எனக்கு விஷேசம், அதுவும் உன்ரை கையிலே தான் இருக்குது."

"என்ன என்ரை கையிலோ..! விளங்க சொல்லன்..."

"நான் உன்ரை தங்கச்சி ந....ளி.....னி......யை கல்யாணம் செய்ய விரும்பிறன்........! உங்களுக்கு சம்மதம் இருந்தால் இரண்டு ஒரு நாளில் நல்ல பதிலை சொன்னால் எனக்கு வசதியாக இருக்கும்; நாட்டு நிலவரமும் தெளிவில்லாமலுள்ளது. வேளைக்கு நானும் போக வேணும்..!"

பாபு தடுமாறி விட்டான். வாழ்க்கையில் எதிர்பாராததொன்று கைகளும் கால்களும் நகர மறுத்தன. ஒரு நிமிஷம் என்றவன் வீட்டுக்குள் போய் வந்தான். வசந்தன் எங்கள் எல்லோருக்கும் விருப்பம் தான். தங்கச்சிக்கு நீ நினைக்கிற மாதிரி கொடுக்க சீர் வரிசைகள் இல்லை. எங்களால் முடிஞ்சதை செய்வம். எதுக்கும் எங்களு க்கும் ஒரு முறை உள்ளது. நாங்கள் நாளைக்கு உங்கள் வீட்டிற்கு வந்து பேசிக் கொள்வோம். அவனுக்கு மனதில் தெம்பு இருந்தாலும் நளினியைப் பார்க்க வில்லையே என்று மனதுக்குள் ஏக்கம்.... தவிப்பு. "உங்களின் வரவை எதிர்பார்ப்பேன் என்ன..!" வசந்தன்......... சயிக்கிளை இறுக்க மிதித்துக் கொண்டான். என்றும் இல்லாத அளவிற்கு மனம் மகிழ்ச்சியாக இருந்தது. புதிய உணர்வும் உற்சாகமும் அவன் உள்ளத்தில் குடி கொண்டது. ஏதோ ஒரு வகையில் ஒருத்திக்கு தன் பங்கை கொடுத்து விட்ட மன நிம்மதி யோடு வீடு திரும்பிக் கொண்டிருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போரழகி முதலிரவு

வீணைமைந்தன்

பௌர்ணமி நிலவில் கும்மாளமிடும்
சமுத்திர அலைகள் போல்
அவளது நெஞ்சம் குதூகலிப்பில் துள்ளவில்லை;
வாழப்பிறந்தவர்கள் நாங்கள் என்று
நினைப்பதை மறந்து போனவர்களுள்
அவளும் ஒருத்தி!

அவளை மணமகளாகப் பார்ப்பதில் அவளை விட
ஏன் எல்லோரையம் விட அவனுக்குத்தான் அதிகம் மகிழ்ச்சி!

புதிதாக இளநீரைச் சுமந்து கொண்டு தொங்கிய
செவ்விள நீர்க்குலையின் அழகிய செஞ்சிவப்பும் மஞ்சளும்
பூசப்பட்டதுபோல் தொட்டுத் தடவச் சொல்லும் பட்டு
மேனி!

அம்மியில் அரைத்த உறைப்பான தேங்காய்ப் பச்சடியில்
அவிந்த மரவள்ளிக் கிழங்கைத் தொட்டுச் சுவைப்பதுபோல
யாழ்ப்பாணத்தைப் பிடிக்க வந்த சிங்களத்து ஆமிக்காரன்
அவளின் அங்கங்களைத் தொட்டுப் பார்ப்பதோடு நின்று விடவில்லை!
நாசமாய்ப் போவான் கடித்துக் குதறிவிட்டான்.

விசர்நாய் கடித்தால் ஊசிபோட்டுக் கொள்வது போல
அங்கு வாழும் பெண்பிள்ளைகள் ஊமைக்காயத்துடன்
வாழப்பழகி விட்டார்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசிங்கப்பட்டுப் போனேன் என நினைத்து அழுது புலம்பித்
தன்னை அழித்துக் கொள்ளக்கூட வாய்ப்பில்லால் துடித்தாள்!

சாவது என்னவோ நிச்சயம்,
அதற்கு முன் அந்த நாசகாரர்களில் கொஞ்சப்பேரையாவது
பழிவாங்க வேண்டுமென்று புதிசாக மாறினாள்!

கிளிநொச்சிக் காட்டில் குழிவெட்டிக் குடிசை போடுவதோடு நின்று விடவில்லை!
பலியெடுக்கும் வித்தை கற்றாள்; பழி வாங்கும் புலியானாள்

வழிமேல் விழி வைத்துக் காத்திருந்தவளை பலிக்கடா தேடி வந்தது;
வேடன் வலை விரிக்காமலேயே வல்லூறுகள் வலிய வந்து விழுந்தன;

எரிபொருள் இல்லாமல் எதிரியின் வண்டி இடம்பெயர மறுத்தது,
பச்சை இறைச்சிக்கும் பருவப் பெண்ணுக்கும் வித்தியாசம்
தெரியாத புத்த தேசத்து நாய்களை பெண்புலியொன்று
பிணக்குவியலாக்கியது!

என்ன ஆச்சரியம்!
அந்த விசர் நாயும் பிணக்குவியலில் ஒன்றாக இருக்கக்கண்டு
களிப்புவகை மேலிட்டு கண்ணீர் சிந்தி நின்றாள்!.

இப்போது அவள் தனது மரணத்தைத் தள்ளி வைக்க அவகாசம்
தேடி நின்றாள்!.

வாழவேண்டும் என்ற ஆசை மழைத்துளிபட்ட விதைமுளை போல
அவள் மனதுள் எட்டிப் பார்த்தது!.

பேராசைதான் அவளுக்கு! ஆனால்,... அது... "போராசை!"

என்னைப் போன்று காயம்பட்டவர்கள்,
காயப்படுத்திய கயவர்களைச் சாகடிக்க வேண்டும் என்ற போராசை!

போராசை கொண்டு புயலாக மாறிய பூவைத்
தென்றலாகத் தீண்டியது ஒரு ஆண் மீசை!.

மீசை வைத்தவர்ளையெல்லாம் அவள் ஆணாகப்பார்ப்பதில்லை,

அந்த மீசைக்காரனும் ஒரு போராளி என்பதால்,
அவனுடைய சிநேகிதம் அவளுக்குச் சுகமாகவிருந்தது!

(இ)ரணமாகிபபோன இதயத்தில் மயிலிறகு கொண்டு நெய் தடவுவது போல்
அவனது ஸ்பரிசம் சுவாசம் எல்லாம் அவளுக்குச் சுகமளித்தது!

ஆனாலும் அவளது நெஞ்சில் ஓர் முள்!
அவளை நெருடிக் கொண்டிருந்தது!
காயம்படாமல் இரத்தம் கசிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏன் இந்தக் கண்ணீர்"?
"இது, இரத்தக் கண்ணீர்!"
அவன் உதடுகளால் அவளை ஒத்தடமிட்டுக் கொண்டிருந்தான்!
"நான் கறை படிந்த நிலவு"
"பகலில் கூட நீ ஒரு பௌர்ணமி நிலவு"

"நான் திரைந்து போன பால்"
"நீ திரைந்து போவதற்கு நான் என்ன உப்புக் கல்லா!"
"புரியாமல் பேசுகிறீர்கள்!'
"உன் உள்ளம் புரிந்ததால் நேசிக்கிறேன்
உண்மை தெரிந்ததால் காதலிக்கிறேன்"
"என்ன உண்மை தெரியும் உங்களுக்கு?"
"பெண்மை என்பது உடல் காயம் அல்ல!
பொய்மையற்ற உள்ளமே பெண்மை!
உனது வாய்மையைத்தான் ஆண்மை நேசிக்கிறது."
"ஆயிரத்தில் ஒருவர் நீங்கள்!'
"ஆண்மையுள்ளவர்கள் எல்லாம் என்னைப் போல் மாற வேண்டும்!"

"பச்சாதாபத்தையோ பரிதாபப் பார்வையையோ
என்னைப் போன்றவர்கள் எதிர்பார்க்கவில்லை!"

"நான் பாசத்தைக் காட்டச் சொல்கிறேன்; பாதிக்கப்பட்ட பாவைகளுக்கு வாழ்வு கொடுக்கச் சொல்கிறேன்."

இப்போது அவர்களிருவரும் அந்த மண் குடிசைக்குள்.
விண்மீன்களின் கண் சிமிட்டலும் நிலா வெளிச்சமும்
தென்னோலைக் கீற்றுக்கலினூடாக அவர்களின்
நாணமிக்க முகமலர்ச்சியை வேடிக்கை பார்த்தது!

காட்டுப் பூக்களினால் தொடுத்த மணமாலையை இருவரும் மாற்றிக் கொள்கிறார்கள்!

சம்பிரதாயங்களை மீறிய சடங்கு முறையில் இருவர் உள்ளமும் சங்கமித்துக் சொள்கின்றன!

அவர்களது இதயத் துடிப்புக்கள் சங்கீத ஒலியாகியது!

அவள் மனது அவனிடத்தும் அவன் மனது அவளிடத்தும் இடமாறிக் கொண்டன!

தாம்பத்ய பூசைக்குத் தடையாகவிருந்த கரடுமுரடான போர்க்காலச்
சீருடையைக் களைந்து தமிழுடையில் தங்களை இலேசாக்கிக் கொண்டனர்!

அங்கு படுக்கை பஞ்சணையுமல்ல; அவர்கள் தூங்கத் தயாராகவுமில்லை;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காய்ச்சிய பாலுமில்லை; கற்கண்டுச் சுவையுமில்லை!
அவர்கள் பார்வை இனித்தது!

மிருகம் ஒன்று காயப் படுத்திய மேனியில் கை தேர்ந்த வைத்தியன் ஒருவன்
களிம்பு தடவுவது போல்
புதியதொரு சுகம் அவளைத் தாலாட்டியது!

குடிசையின் ஓரத்தில் எரிந்து கொண்டிருந்த திரி விளக்கு
தன்னை இருட்டாக்கி விடுவார்களோ என அச்சம் கொண்டது!.

அவன் விளக்கை அணைக்கவில்லை!
பதிலுக்கு அவளை அணைத்தான்!
இது எங்கள் முதலிரவு என்றாள்!
இல்லை நீ என் முழுநிலவு என்றான் அவன்!

பிற்குறிப்பு:

இச் சித்திரத்தை எழுதத் தூண்டிய கரு கற்பனையல்ல
எமது மண்பிறந்த மங்கையர் குல மாணிக்கங்களை,
மானத்துடன் வாழவைப்பதற்கு மனதிலுறுதி படைத்த
எமது இளைஞர்கள் முன்வர வேண்டும்.

உங்களுக்குத் தேவையான சகல அச்சமைப்புத் தேவைகளுக்கும்
(416) 425-2884

Creative
Photo

where photography is an art...

Wedding, Digital imaging, Commericial photography and Portraits

(416) 429-8586



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோபால் பேணிச்சர்ஸ் ஸ்தாபனத்தினரின்
மற்றொரு தொழிற்சாலையுடன் கூடிய கிளை நிறுவனம்

GOPAL FURNITURE
MANUFACTURING Inc.



அனைத்து வீட்டுத் தளபாடங்களும் Manufactory விலையில்
நீங்கள் நேரடியாகப் பெற்றுக் கொள்ளலாம்.
தெரிவுக்கு முந்துங்கள்.....

- இத்தாலியன் **Bed Room Set & Dining Set**
மலிவு விலையில்பெற்றுக் கொள்ளலாம்.

1600 Brimley Road, Unit. 9, Scarborough, ON
Brimley & Ellesmere சந்திப்பில் Scarborough Centreக்கு முன்பாக
Tel: (416) 321-0996/ 785-9544 Fax: (416) 321-0504

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைஞரின் 'புதுக்கவிதை'

புதுக் கவிதைகள் எனப் பெயர் சூட்டிக் கொண்டு இன்று ஏராளமாகப் பெருகிவிட்ட சொல்லோவியங்களை சுமார் ஐம்பது ஆண்டுகட்கு முன்பே கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் எழுத ஆரம்பித்தார்.

அவரது புதுக்கவிதையிலிருந்து இஃதோர் எடுத்துக் காட்டு....!

'மலையே! வைரமணி விளக்குகள்
ஒளிவிடும் வானப்பந்தலின் கீழ்
அரியாசனம் வீற்றிருக்கும்
பூமி அன்னையின் தலையை அலங்கரிக்கப்
பொன்னாலும் பச்சையாலும்
இழைக்கப்பட்ட மணிக்கிரீடம் என்பேன் உன்னை!
விண்ணகத்து வெண்முகில்கள் எல்லாம்
கீழே வீழ்ந்து கண்ணுக்கெட்டா உயரம்
வளர்ந்தனவோ எனத் திகைக்கின்றேன்!
பனியால் நீ உடலை மூடிக் கொண்டிருக்கும் போது!'

புகழ்

கலைஞர் மு.கருணாநிதி

'புகழ்! நீ ஒரு கணிகை. கால் கடுக்க உன்னைத் தேடி அலைபவர்களிடம் காசு பெற்றுக் காதல் வழங்குகின்றாய்!'

'புகழே! நீ ஒரு சந்திரமண்டலம். உன்னை முழுமையாக அடையும் முயற்சியில் பல மேதைகள் இன்னும் வெற்றி பெற முடியவில்லை"!

'புகழே! நீ ஒரு பனிக்கட்டி. உன்னைக் கைக்குள்ளேயே வைத்து கெட்டியாகப் பிடித்திருந்தாலும் நீராகக் கரைத்து மறைத்து விடுகிறாய்.

புகழே! நீ ஒரு மதுக்கலயம். உன்பால் வீழ்ந்த ஈக்கள் எழுந்ததே இல்லை!'

புகழே! நீ ஒரு நிழல். உன்னைப்பற்றிக் கவலைப்படாதவர்களைத் தொடர்ந்து கொண்டேயிருப்பாய்!'

தொகுப்பு: வீணைமைந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Pillayar Traders

உங்கள் அனைத்து தேவைகளையும்
ஒரே இடத்தில் பூர்த்தி செய்து கொள்ள நாடுங்கள்

பிள்ளையார் ட்ரேடர்ஸ்

3060 Lawrence Ave.E., Scarborough, ON.
(at Lawrence & Markham)

Tel: (416) 438-7746

ALL PRO
AUTO PARTS & SERVICES

BODY WORKS
Free Inspection

- Transmission Oil-Engine Oil Change
- Tune-up
- Front End and suspension
- Cooling System flush & Recycle
- Brakes (parts & labour)
- Wheel Alignment (special $30)
- Tire Rotation
- Exhaust System

1277 (Rear) Bloor St
691 (Rear) Lansdowne Av.
Toronto
Tel: (416) 534-3771
243-1774

(416) 571-6948
(weekends)



OWNER / TECHNICIAN
SIVA or PRASAN

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிவந்துவிட்டது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமதி. லூடஸ் ஜோன் பிள்ளை
மொன்றியல் கவிஞர்.
ஒரு நேர் காணல்

தமிழீழம், மன்னாரைப் பிறப்பிடமாகக் கொண்ட இப் பெண் எழுத்தாளர் மொன்றியாலில் 1980லிருந்து வாழ்ந்து வருகிறார். இலங்கையில் தபால் - தந்திப் போக்குவரத்துச் சேவையில் பணிபுரிந்த இலக்கிய ஆர்வலர். அதிகம் பத்திரிகைகளில் இடம் பெறாத இவரது பல கவிதைகளின் தொகுப்பு - மானுட நேயத்தைப் பாடுகிறது. நூல் வடிவில் வெளி வந்தால் கனடிய தமிழ் எழுத்துலகிற்குப் பெருமை சேர்ப்பதாக அமையும். கவிதை, கட்டுரை, சிறுகதை எழுதுவது மட்டுமல்லாமல் ஓவியம் வரையும் ஆற்றலும் மிகுந்தவர் லூடஸ் அவர்கள். தொடர்ந்து ரோஜாவில் இவரது படைப்புகளும் - ஓவியங்களும் வெளியாகும்.

முதல் முதலாக 'ரோஜா' மூலம் கனடிய வாசகர்களுக்கு அறிமுகமாகும் இவ்வெழுத் தாளரை வாழ்த்தி வரவேற்கிறோம்.

ரோஜா சிறப்பிதழுக்காக இவ் நேர்காணலைத் தொகுத்தவர் இம்மாத 'சிறப்பாசிரியர்' **வீணைமைந்தன்.**

கவிஞர் லூட்ஸ் ஜோன் பிள்ளையின் 'பெண்ணை விலை பேசாதே!' எரிக்கும் கவிதை இவ்விதழில் இடம் பெறுகிறது!

இம்மாத இதழ் பற்றி உங்கள் கருத்துக்களை, (416) 703-5689 என்ற இலக்கத்தை அழைத்து பதிவு செய்யுங்கள்.

மொன்றியல் நகரைக் குளிராக அணைத்துச் செல்லும் சென்றோறன் நதியினுள் முத்தெடுக்க முடியாவிட்டாலும் இங்கு வாழும் ஈழத்தமிழர்கள் மத்தியில் அவ்வப்போது சில கவி முத்துக்கள் கிடைக்கின்றன.

விளம்பரத்திற்காகவும், பிரபல்யமடை-வதற்காகவும் கனடியப் பத்தரிகைகளில் முகம் காட்டும் பேனாக்கள் மத்தியில் இலை மறை காயாக இலக்கியம் சுவாசிக்கும் பெண் கவிஞர் அவர்களை 'ரோஜா'வின் மூலம் அறிமுகம் செய்து வைப்பதில் பெருமைப்படுகிறோம்.

'தமிழ் ஈழம். மன்னார் எனது சொந்த ஊர். அங்கு பிரபல்யம் வாய்ந்த புனித சவேரியார் பெண்கள் கல்லூரியே எனது கல்விச்சாலை'.

தமிழ் இலக்கிய ஆர்வம் உண்டாவதற்குத் தனிப்பட்ட காரணங்கள் ஏதும் உண்டா.....?

'சுப்பிரமணிய பாரதியாருக்குத்தான் அந்தப் பெருமையுடையது. அவருடைய கவிதைகளைப் பள்ளியில் படித்ததினால் தான் எனக்குக் கவிதை இலக்கியத்தில் ஆர்வம் உண்டாயிற்று.'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கனடாவில் அதிகமான பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் வருவதைத் தப்பாகக் கருதவில்லை. அது தமிழ் மொழிக்குப் பெருமை சேர்ப்பது, ஆனால் தரமாக இருக்க வேண்டும். அது தான் முக்கியம்."

'அதுவும் பெண் விடுதலை பற்றிப் பாடி வைத்த புரட்சிக்கவி அவர். இயல்பாகவே மனித சமூகத்தின் துன்பங்கள் என்னைப் பாதிப்பதால் அதற்கு மருந்து தந்த மாகவி என்று அவரைச் சொல்லுவேன்'

'தொடரந்து கண்ணதாசனின் இலகு நடைக் கவிதைகள் என்னைக் கவர்ந்தன.'

'இளவாளை பெண்கள் கொன்வென்டில் உயர்வகுப்புக் கல்வியைத் தொடரும் போது எனக்குத் தமிழ் மொழிப் பாடம் எடுத்த சங்கைக்குரிய சகோதரி, ஹோட்டன்ஸ் (Sister Hortense) எனது கவியுணர்வை அடையாளம் காட்டினார்.'

"உனது பதில்கள் எல்லாம் கவிதை வடிவில் எழுதப்படுவது இரசிக்கக் கூடிய விதமாக உள்ளது" எனப் பாராட்டுவார். அத்துடன், 'நீ கணக்குப் பாடத்தில் அதிக புள்ளிகளை வாங்குவதால் கெட்டிக்காரி அல்ல. தமிழ்ப் பாடத்திலும் அதிக புள்ளி களை வாங்கினால்தான் "கெட்டிக்காரி யாவாய்", என்று தட்டிக் கொடுப்பார்.

'இலங்கையில் எந்த பத்திரிகைகளிலும் நான் எழுதவில்லை 1971ம் ஆண்டு யாழ் குடாநாட்டுப் பாடசாலைகளுக்கிடையே நடந்த கட்டுரைப் போட்டியில் முதல் பரிசு கிடைத்தது.'

'மன்னாரைச் சேர்ந்த பிரபல எழுத்தாளரும், நாடகாசிரியருமான திரு. சூசைநாயகம் அவர்கள் என்னைக் கவிதை எழுத ஊக்குவித்தவர். அவர் ஒரு அடியை ஆரம்பிக்க அடுத்த அடியை என்னை எழுத வைப்பார்"

'ஒருமுறை மன்னார்ப் பகுதியில் ஒரு போராளியின் இழப்புக் குறித்து கவிதையொன்றை எழுதினேன். அங்கு வருகை தந்திருந்த மறைந்த தலைவர். அ. அமிர்தலிங்கம் அவர்கள் அக்கவிதையை உணர்ச்சியுடன் பாராட்டினார்.'

'இலங்கை வானொலிக்கு விமர்சனங் களைக் கவிதை உரை நடையில் எழுதுவேன். அவற்றை மறைந்த கவிஞர். சில்லையூர் செல்வராஜன் வாசிப்பதைக் கேட்டு மன மகிழ்ச்சியடைவேன்.'

'இளைய தலைமுறையினரிடம் வாசிப்புப் பழக்கத்தை எப்படி ஏற்படுத்தலாம்'

'இளைய தலைமுறையைக் கவர்ந்த சாதனம் - சினிமாப் பாடல்கள். அதுவும் இப்போது ஆங்கில வார்த்தைகளையும் கலந்து மேற்கத்திய இசைப் பின்னணியில் அவர்களைப் பாட வைக்கிறார்கள்; ஆட வைக்கிறார்கள்.'

'படிக்க வைப்பதற்கும் இளைஞர் - இளை யுவதிகளுக்குப் பிடித்தமான விடயங்களை ஆராய்ந்து எழுத வேண்டும். அதற்காக ஆங்கில வார்த்தைகளைக் கலந்து எழுதச்சொல்லவில்லை.'

'கம்பராமாயணத்திற்குப் பொழிப்புரை எழுதினால் இக்காலத்திய தலைமுறை படிக்கப் போவதில்லை.'

'கனடாவில் அதிகமான பத்திரிகைகளும் - சஞ்சிகைகளும் வருவதைத் தப்பாகக் கருதவில்லை. அது தமிழ் மொழிக்குப் பெருமை சேர்ப்பது, ஆனால் தரமாக இருக்க வேண்டும். அது தான் முக்கியம்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னுடைய கவிதைகளும் - உரை நடைகளும் மானுடப் பிரச்சினைகளைக் குறித்தேயிருக்கும். பாமரர்களும் புரியக்கூடிய விதத்திலே - அவர்களைச் சென்றடையும் நோக்கிலே தான் எழுத முயற்சிப்பேன்.'

'நான் கிறிஸ்தவ சமயத்தைச் சார்ந்தவளாக இருந்தாலும் மேலை நாட்டுக் கலாச்சாரம் எங்களைப் பாதிப்பதில்லை. இந்துக்கள் கூட ஆடையலங்காரங்களை மேற்கத்திய பாணியில் தான் அணிகிறார்கள்.'

'தேவாலயங்களில் தமிழ் மொழியில் பூசையும் - தைப்பொங்கல் திருநாளையும் கொண்டாடி எங்கள் மொழி - கலை - கலாச்சாரப் பின்னணிகளை நினைவுபடுத்தி வருகிறோம்.'

கனடியப் பத்திரிகைகளில் ஏன் எழுதுவதில்லை?

'நானாக எழுதப் போவதில்லை. உங்களைப் போன்றவர்கள் கேட்டால் எழுதியனுப்புகிறேன்'

'ரோஜாவின் மூலம் உங்கள் எழுத்துக்கள் நிச்சயம் வாசம் பரப்பும்; வாசிக்கத் தூண்டும்!'

பெண்ணை விலை பேசாதே!

• கவிஞர் பாட்ஸ் ஜோசப் பிள்ளை
மொன்றியல்

சந்தையில் விற்கும் சரக்காமோ பெண்கள் - சாதி
பந்தங்கள் யாவும் இழந்தாரோ கண்கள் - ஆடு
மந்தை போல் பெண்ணை விலை பேசும் ஆண்கள்
ஆண்மையில்லாத ஆணவத்து ஜென்மங்கள்
விந்தை இதுவென்று வியப்பார் வேற்று மனிதர், - பெண்ணை
விலை பேசி மணப்பார் வியாபாரமாயச் சில ஈனர்
சிந்தையில் இரு மனம் சேர்வதல்லோ திருமணம்
சீர் கேட்டால் அது சீர் கெட்ட தொரு மணம்
முந்தையில் எம் மூதோர் கேட்டது பெண்ணுக்கு
நால் வகை குணம் - சில
மூடர்கள் இன்று பெண்ணிடம் கேட்பதோ
தாள் வகைப் பணம்
இந்தையில் தருவதாயின் பெண்ணுக்கு ஒரு தொகைப் பணம்
இனிமேலும் தேவையுண்டோ ஆணுடன் திருமணம்!
தந்தை யாக வருவதற்கு தேவை எனில் பணம் - அதைத்
தருவதற்கும் வங்கியுண்டு அறியாதோ ஆணின் - பெண்ணை
நிந்தை செய்தால் அது உம் அறிவீனம்!
நீதி யென்றால் பெண்ணுக்கு நீரே தர வேண்டும் சீதனம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீனாட்ஷி
Meenakxy Take Out

(SRI LANKAN & EAST INDIAN)

மிசுஸாகாவில்
புதியதொரு ஸ்தாபனம்

இலங்கை, இந்திய
உணவுகளை சுவையுடன்
உடனுக்குடன்
தயாரித்து தருவதில்
மீனாட்ஷிக்கு நிகர்
மீனாட்ஷியே!

திருமணம்,
பிறந்தநாள் போன்ற
உங்கள் குடும்ப
வைபவங்களுக்கு
கேட்டறிங் சேவையும்
உண்டு.

3419 Fieldgate Dr. at Bloor St. E.
Mississauga, ON

(905) 238-6114

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்கலோ பொங்கல்!

தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் விழா பற்றி பேரறிஞர். அண்ணா அவர்கள் எழுதிய கட்டுரையிலிருந்து சில பகுதிகள்....

தொகுப்பு: வீணைமைந்தன்

கூவடா தம்பி; கூவி - கரும்பைக் கடித்துக் குதப்பும் 'இளங்கன்றை' நோக்கிக் கூறுகிறாள், அந்தக் குலவிளக்கு. கொழுநனோ, 'உடைத்தெடுத்த தேங்காயின் வெண்மை எப்படி ஒட்டிற்று, என் பைங்கிளியின் பல் வரிசையில்!', என்றெண்ணியபடி நிற்கிறான், அவளருகில், இஞ்சியும், மஞ்சளும், செந்நெலும், கன்னலும், அவர்கள் அருகே - மலைபோல், அல்ல: ஓரளவுக்கு. மழலை சிரிக்க - மாதுளை உதடுகள் திறக்க - வீரத் தோள்கள் குனிய, புது அடுப்பிலே, அவர் களது ஆனந்தத்துக்குத் 'தாளம்' போடும் பொங்கல் பானையைப் பார்க்கின்றனர்.

மண் தந்த பானை! அதில், அதே மண் வழங்கிய அரிசி!! ஆவின் பாலும், அதிம துரப் பொருள்களும் கலக்க, பொங்கி வழிகிறது.

வழிகிற பொங்கல், தனக்கு மட்டுமல்ல, எல்லோருக்கும் இருக்க வேண்டுமாம். அதனால், ஒவ்வொரு குடும்பமும், இன்று உரத்துக் கூவும், கூவி அழைக்கும். அந்த அழைப்பில் மிதந்து வரும் அன்போசை, எங்கே உண்டு, இவ்வுலகில்! அயலா ரையும் உற்றாரையும் அழைக்கும் பெருமித நினைவு, காண முடியுமா, பிறரிடம்!
வழிகிறதாம், பொங்கற் பானை! அது போல. ஆனந்தமும் பொங்கி வழிய வேண்டுமாம்!! யாருக்கு?

அவனுக்கு மட்டுமா? அல்ல! அல்ல!! எல்லோருக்கும் இருப்பது குச்சு வீடு, ஏரும் கலப்பையுமே பரம்பரைச் சொத்து, நண்டும் தேளும் நெளியும் குப்பம், நாயினும் கேவலமான வாழ்வு - ஆயினும், அந்த நல்லவன், நாவாரக் கூவுகிறான், இன்று பொங்கலோ. பொங்கல்! எல்லோருக்கும் பொங்கல்!!! என்பதாக.

இந்த மனவளத்தை, தமிழ் மாநிலம் தவிர, வேறெங்கு காட்டமுடியும்! அந்தளவுக்கு, விரிந்து பரந்தது தாயகத்தான் மனம். தான் வாழ்ந்திட்டால் மட்டும் போதாது. செழுங்கிளையும் வாழ்தல் வேண்டும், செல்வமும் வளமும் இல்லந்தோறும் இடம் பெறுதல் வேண்டும் - அந்த இன்பம், இதோ வழிகிறதே பொங்கல், இது போல, எல்லோருடைய மனதிலும் பொங்கிப் பொங்கி வழிய வேண்டும் எனும் மங்காத மனவளத்தன் சின்னமாகத் தவழ்வது, இன்றையப் பெருநாள்.

இந்தச் சின்னம், அரிதாயிருக்கக் கூடும். நாகரீகம் வளர வளர, நல்மனம் தேய்பிறை யாகும், நகரங்களில் வாழும் நாச மதியினரி டையில்! ஆனால். நாட்டின் உயிரோட்டமாக இருக்கும் சிற்றூர்களில்; அங்கே சிதைந்த கோட்டை போல உலவும் உழவரிடையில்: பொங்கல் விழா, ஒரு பூரிப்புத் திருநாள்! போனதை மறந்து, புது உறவைத் தேடும் இன்பத் திருநாள்.

எத்தனையோ பூசல்கள், வாய்க்கால் சண்டைகள், வம்பு தும்புகள் இருந்தாலும், ஆலமரத்துக்கு அடியிலோ மாடு விடும் மந்தையிலோ, கூடப் பேசிக் குலவ உலவி வெற்றிலையும் சந்தனமும் விரும்பிப் பரிமாறிக் கொள்வர்.

அந்தப் பெருந்தன்மையால்தான், உண்பது நாழி உடுப்பது நான்கு முழமானாலும், ஏழை உழவன் மனையில், அண்ணா பொங்கல்! அம்மா பொஙகல்! அய்யா, பொங்கல்! பொங்கலோ பொங்கல்!! - எனும், ஆனந்த முழக்கம் கேட்பது.

புதுப் பானையிலிருந்து பொங்கி வழிவதைப் போல, பூக்க வேண்டுமாம், இன்பம்! எல்லோருக்கும்!! - இந்த அரியதோர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்பை. அன்று தொட்டு இன்று வரை, விடாது வைத்திருக்கும் விழா நாள் இது.

அதனால்தான், வீண் விழாக்களை வெறுக்கும் அறிவியக்கம் மார்கழித் திங்களின் முடிவில் முகிழ்க்கும் இந்த அறுவடை விழாவினை, ஒப்பற்ற விழாவென எண்ணி, உள்ளம் குதூகலிக்க, ஒவ்வோராண்டும் கொண்டாடுகிறது.

உழவர் விழா! அறுவடைத் திருநாள்! விளைச்சல் விழா! வியர்வைத் திருவிழா! திராவிடர் தம் பெருநாள்! எனறு செப்பிச் செப்பி உவகை கொள்ளுகிறோம். பழையன கழித்துப் புதியன கொள்ளும் கருத்தின் காரணமாக மட்டுமல்ல - உயிருட்டும் பூமியன்னையின் படைப்பைக் கையேந்தி வாழ்த்தும் பெருந்தன்மையின் காரணமாக மட்டுமல்ல - நாட்டின் நரம்புகள் உழவர்கள்; அவர்களது சொந்தத் திருநாள் இது என்ப தற்காக மட்டுமல்ல - இந்த விழா, உழைப்பின் உயர்வை உலகத்துக்கு அறிவிக்கிறது எனும் ஒரே காரணத்துக்காக மட்டுமல்ல, இதில் பொதிந்து கிடக்கும் 'எல்லோரும் இன்புற்று வாழ வேண்டும்' எனும் அரியதோர் கொள்கைக்காகவே, இதனையோர் உவகைக் கூத்தென உள்ளம் வியக்கக் கொண்டாட விரும்புகிறோம்.

"புது வருடத்தின் தைத்திங்கள் ரோஜா சிறப்பு இதழைத் தயாரிக்கும் 'சிறப்பாசிரியர்' பணியை ஒப்படைத்த அன்புக்குறிய தம்பி 'ரோஜா' ஆனந்த் அவர்களுக்கும்,

'ரோஜா' இதழ் பக்கங்களில் புதுவாசம் பூசிய இலக்கிய நண்பர்களுக்கும் என் இதயம் நிறைந்த நன்றிகளையும், பொங்கல் வாழ்த்துகளையும் மகிழ்வுடன் தெரிவிக்கின்றேன்.

~ வீணைமைந்தன்

அடுத்த இதழில் ஆரம்பமாகிறது!

'ரோஜா' கலைஞர்களால் மாதந்தோறும், கனடாவில் பிரசித்திபெற்ற இடங்களுக்கு சுற்றுலா ஒன்றை மேற்கொண்டு, அச்சுற்றுலாவில் ஏற்பட்ட அனுபவங்கள், அவ்விடத்தின் சிறப்புகள் பற்றி 'பார்த்ததும் அறிந்ததும்' என்னும் சுற்றுலாக் கட்டுரை அடுத்த இதழில் ஆரம்பமாகிறது!

கனடா இலங்கைத் தமிழர் வர்த்தக சம்மேளனம்

கனடா இலங்கைத் தமிழர் வர்த்தக சம்மெளன காரியாலையம் ஒவ்வொரு வியாழக்கிழமையும் மாலை 4.00 மணி தொடக்கம் 6.00 மணிவரை தமிழர் வர்த்தக ஸ்தாபன தகவல்களுக்கும், உதவிகளுக்கும் திறந்து வைக்கப்படும்.

2387 Eglinton Ave. E., Unit. 7
Scarborough, ON. M1K 2M5

ஆலோசகர்: திரு. J. A. ஜெகநாதன்
தொடர்பு இல.: (416) 293-6555
முற்பதிவு செய்யப்பட வேண்டும்.

பிரபல கவிஞர் நிலா குகதாசன் நலம்பெற்று மீண்டும் நம்முன் ஒளிவீச இறைவனைப் பிரார்திப்போமாக

கனடிய தமிழ் படைப்பாளிகள்

ஜனவரி 1997 முதல் 'ரோஜா' சஞ்சிகையை 'கனடிய தமிழ் படைப்பாளிகள்' (THAMIL CREATORS OF CANADA) என்னும் நிறுவனமே பிரசுரம் செய்யும்; மாதாமாதம் 10ம் திகதிகளில் 'ரோஜா'வினை தமிழ் வர்த்தக நிலையங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

'ரோஜா' வெளியீட்டுப் பிரிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண் விடுதலை

பத்மஸ்ரீ டாக்டர்.
பானுமதி இராமகிருஷ்ணா

பெண்கள் சுதந்திரம் பற்றி பேசற தெல்லாம் சுத்த முட்டாள்தனம். பெண் ஒரு சுய சக்தியின் சுய ரூபம். அவளே ஒரு சுவதந்திரி. அவளுக்கு இருக்கற சுதந்திரம் யாருக்கும் இல்ல. பெண் பிறக்கும் போதே தாயா பிறக்கறா. ஆணுக்கும் பெண்ணுக்கும் ஜென்மம் கொடுக்கறதே பெண்தான். அவ ஒரு மகா சமுத்திரம் மாதிரி. யாருமே அவளை தடுக்க முடியாது. ஆண்பிள்ளை உட்பட, மனசுல தைரியம் இருக்கனும். மனசுக்கு எது சரின்னு தோணறதோ அத தைரியமா செய்யணும். ஆத்மசுத்தி இருந்தா தான் தைரியம் வரும். புருஷன் அடிக் கிறான்னா பயப்படாதே, திருப்பி அடி. குடிச்சு ஆடிக்கிறான்னா பயப்படாதே, திருப்பி அடி. குடிச்சு எல்லாத்தையும் நாசம் பண்றானா? வீட்டைவிட்டு துரத்து. எல்லாத்தையும் எதிர்த்து சமாளிக்கக் கூடிய பெண்கள் இருந்தா ஆண்கள் பயப்படுவாங்க.

உங்கள் பார்வையில் உலக மாற்றம்

காலம் மாறுது. அதைப் பாத்து சிரிச்சுக் கிட்டே போயிடணும். இந்த பானுமதியைப் பத்தி ரொம்ப பேருக்குத் தெரியாது. எனக்கு கடவுள் நம்பிக்கை ரொம்ப ஜாஸ்தி. நான் பூஜிக்கிற அம்பாள்தான் எனக்கு அனுக்கிரஹம் செஞ்சிருக்கா. எனக்குத் திருப்தியான வாழ்வு ஒண்ணு தான் தேவை. என்னுடைய கணவரோட எண்ணமும் அதுதான் பேராசைகள் இல்லாத திருப்தி இருந்தா அதை விட நிம்மதி வேற ஒண்ணும் இல்ல. பெரிய பெரிய பட்டங்கள், விருதுகள், இதெல்லாம் இன்னும் கிடைச்சிருக்கணும்னு சில சமயம் சினேகி தர்கள் சொல்லுவாங்க. எனக்கு எதுவும் தேவையில்லை. நான் திருப்தியா இருக்கேன்.

நன்றி: இந்தியா டுடே.



SRI SIVA
JEWELLERY
721 Bloor St. W. , Toronto, ON.
Tel: (416) 531-4867

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைஞரின் மகள்
கனிமொழி கருணாநிதியின்
'கருவறை வாசனை'
கவிதைத் தொகுப்பிலிருந்து
நன்றி
தொகுப்பு:
வீணைமைந்தன்.

கருவறை வாசனை



அது சந்தனம் இல்லை
ஜவ்வாதோ, இப்போது
அழகான புட்டிகளில் விற்கும்
வாசனைத் திரவியமோ, எதைப்
போலும் இல்லாத புதுமணம்.
சின்னவயதில் அவளைக்
கட்டிக்கொண்டு தூங்கியபோது
மெல்லியதாய் வந்து மூக்கைத் தழுவும்
அவள் அவிழ்த்துப்போட்ட சேலையைச்
சுற்றிக்கொண்டு திரிந்தபோது.
அவளின் வாசனையை,
பூசிக்கொண்டதாய்த் தோன்றும்
முதல் மழையின் மண்வாடை போல்,
மூச்சுமுட்ட நிரப்பிவைத்துக்கொள்ள
தூண்டும் அம்மாவின் வாசனை.
எங்கெங்கோ பட்ட காயங்களுக்கு மருந்தாய்
அவள் மடியில் தலை வைத்துத்
தூங்கியபோதெல்லாம் பாதுகாப்பாய்,
என்னைத் தாங்கிய மணம்.......
அவள் என்பதே அதுவும் சேர்ந்துதான்.
வளர்ந்து விட்ட மனதின் சுவர்கள்
அவளைக் கட்டிக்கொள்ள விடாத போதும்,
மெத்தென்ற இதழாய் வருடிப்போகும்.....
தேவைகளின் தடம் பிடித்து,
தூரவந்துவிட்ட போதும்,
எனக்கு மட்டுமே புரியும்
அவளின் கருவறை மணத்தை
அள்ளி அள்ளி என்
வீடெங்கும் தெளித்து,
சுருண்டுபடுத்துத் தூங்கிப் போக வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிமுகம் ஒரு புதுமுகம்

என்னை மறந்திருப்பேன்

எரிமலையைக் கடப்பேன் - என் நாடு
சுதந்திரம் பெற்றால்!
என்னை மறந்திருப்பேன் - எங்கள் தலைவன்
சிரிப்பரும்பினால்!
கண்ணீரை மறுப்பேன் - என் நாடு
என்னைக் கட்டி அணைத்தால்!
கடவுளை மறப்பேன் - என் தாயின்
கனவுகள் நிஜமானால்!
நான் சிரிப்பேன் - என் நாட்டு மக்கள்
நிம்மதியுடன் சிரித்திதால்!
நான் உயிருடன் இருப்பேன் - யாவரும்
உயிருடன் இருந்தால்!
என் கூந்தலில் பூ சூட்டுவேன் - என் நாட்டு
மரங்களில் பூ பூத்தால்!

★★★★★★

அவன் கண் விழித்தான்

அவள் கண்ணீரை சுமக்கும் போது
அவன் சிரிப்பை சுமந்தான்!
அவள் அவனை நினைக்கும் போது
அவன் பணத்தை நினைததான்!
அவள் அன்பை சுமக்கும் போது
அவன் ஆணவத்தை சுமந்தான்!
அவள் கண்ணை மூடும் போடும் போது
அவன் கண் விழித்தான்!

★★★★★★

கலாராணி இராசரத்தினம்

North Albbion High School
ஆண்டு - பதினொன்று

இரணைமடு நீருற்றின் அரவணைப்பில் செழிப்புறும் உருத்திரபுரம் என்னும் கிராமத்தில் இருந்து ஓர் தமிழ்ப் பறவை இந்த அந்நிய தேசத்திற்கு அறிமுகமாகிறது. ஒடுக்கப்பட்ட தன் சிறகுகளை விரித்து தமிழ்பண்பாட்டு கோலங்களுக்கிடையில் சுதர்திரமாக பறக்க ஆசைப்படுகிறது அந்தப் பறவை.

பெயரிலேயே கலாராணியாக அடியெடுத்து வைக்கும் இந்த இளம் பறவைக்கு இந்த இதழ்கள் கனம் அமைக்கின்றன. தாயாரின் இனிய அரவணைப்புகளுடனும் ஆதரவு களுடனும் இந்தப் பறவை தமிழ் உலகிற்கு அறிமுகமாகிறது.

சில வருடங்கள் மட்டுமே இலங்கையில் இருந்தபோதும் இறுமாப்புடன் தமிழை தலையில் தூக்கி வைத்த சிறு பறவை இது. இந்த இளம் பறவையின் நிழல்கள் இந்த தேசத்தில் படர்ந்த போதும்..... நினைவுகள் தாய் மொழியை நேசித்த வண்ணமுள்ளன.

நினைப்பதையெல்லாம் எழுத முனையும் இந்த நினைவுப்பறவை...... நிஜப்பறவை யாகி நிஜங்களை தரிசிக்க எமது வாழ்த்துகள்!

அரும்பும் எழுத்தாளர்களே! நீங்களும் இப்பகுதியில் அறிமுகமாக விரும்பினால் (416) 703-5689 என்ற இலக்கத்துக்கு அழைத்து உங்கள் விபரங்களைப் பதிவு செய்யுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாராணியின்

புதிய பாதை

மீனா: "வாணி நேற்று கணித பாடத்தில் என்ன Home work தந்தார்கள்"

வாணி: "மீனு. இங்க பார் நான் எப்பவும் இப்படி செய்யேலாது கணிதத்தில் நீ எடுக்கும் marks நல்லது தான். ஆனால் நீ வகுப்புக்கு ஒழுங்காக வருவதில்லை அது தான் Final Examக்கு நீ 68, 70 எடுக்கிறாய்..... என்னையாவது படிக்க வீடு. மீனா ப்ளீஸ்."

மீனா: "லதா நீயாவது சொல்லண்டி."

லதா: "மீனா இந்தா உன் Quiz Paper உனக்கு ஐம்பதிற்கு நாற்பத்தியெட்டு"

மீனா: "சரி...... நேற்று கணித பாடத்தில் என்ன Home work தந்தார்கள் சொல்லு லதா."

லதா: மீனு நான் சொல்லுகிறேன். ஆனால் தமிழில் கதைக்காதே. வாத்தியார் திட்டுவார்.... மீனு மணி அடித்து விட்டது வா வெளியில் போய் கதைப்போம்." "ஏன் உன் முகத்தை சோகமாக வந்திருக்கிறாய்."

மீனா: "என்ன செய்வது என்று தெரியவில்லை படிப்பதா? வேலைக்கு போவதா.... ஒன்றுமே புரியவில்லை லதா."

லதா: "படிப்பை நிறுத்தினால் உன் வாழ்கை பாதிக்கும் வேலையை நிறுத்தினால் உன் குடும்பம் பாதிக்கும்....."

மீனா: "ஏன் வாணியும் சோகமாக இருக்கிறாள்."

லதா: "மீனா தெரியாதா.... அவளும் உன்னை போல் தானே... அவளும் வேலைக்கு போகிறாள் ஆனால் நீ பதினேழு வயதில் அவள் இருபது வயதில் வெறுப்பாக இருக்காதா சொல்லு."

மீனா: "வாணியைக் கூப்பிடு லதா."

வாணி: "மீனா நீ ஏன் வேலைக்கு போக வேண்டும் உன் அண்ணன் வேலைக்கு போகிறார் தானே."

மீனா: "அண்ணன் வேலைக்குப் போய் என்னத்தை காணும் நானும் வேலைக்குப் போனால் தானே குடும்பத்தை கொண்டு நடத்தேலும்."

லதா: "வீட்டிற்குள் அடைப்பட்டுக் கொண்டு வெளியில் வரமாட்டேன் என்கிற பெண்கள் எல்லாம் இப்போ வேலைக்கு போகிறார்கள். ....ம்...."

மீனா: "என்னை நக்கல் செய்தது போதும்."

வாணி: மீனா உங்கள் வீட்டில் எத்தனை பேர் வேலைக்குப் போறீங்கள். ஆனால் கஷ்டம், கஷ்டம் என்று சொல்லுகிறிங்கள்."

மீனா: "வாணி நீர் சுலபமாக சொல்லி விட்டீர்.... ஆனால் மூன்று பெண்கள் அதுவும் கனடாவில்..... நினைத்தால் பைத்தியமே பிடித்து விடும் போல் இருக்கிறது."

லதா: "எப்பவும் பெண்களுக்குத்தான் கஷ்டம். அதற்காக எப்பவும் கவலையாக இருந்தால் படிப்பும் ஏறாது. உலகத்தில் எல்லோருக்கும் கஷ்டம், துன்பம் வருவது சகஜம். அதை தாங்கும் சக்தி மனிதர்களுக்குத் தான் உண்டு. இதை பெரிது பண்ணாமல்..... படிப்பில் முன்னேற்றம் காண்போம்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாணி: "கவலைகளை மறப்பதற்கு...... நாமெல்லாம் ஒன்று சேர்ந்து ஒவ்வொருவருக்கு ஒவ்வொருவாக ஆறுதல் கூறிக் கொள்வோம். மூவரும் சேர்திருந்தால் எமது கவலைகளை இலகுவில் திசை திருப்பி விடலாம்..."

லதா: ஒரே Building இல் தானே மூவரும் இருக்கிறோம். எப்பவும் சோகம், துன்பம், படிப்பு, வீடு என்று "இருக்காமல் சுறுசுறுப்பாக இருந்து தான் பார்போமே.... கொஞ்சம் புதிய பாதையில் தான் சென்று பார்போமே."

வாணி: "மீனா படிப்பு, வேலை என்று இருந்து விடாமல் கதை, கவிதை எனறு பல முயற்சியில் தமிழிலும் ஆர்வம் காட்டுவோம் அது சதி யார் கதை எழுதப் போகின்றீர்கள். இவற்றால் எமது மனம் ? சந்தோாஷமடையும்."

லதா: "வாணி நீ என்ன கதையா அல்லது கவிதையா?"

வாணி: " நான் கவிதை எழுதுகின்றேன் லதா"

மீனா: "லதா நீ என்ன சொல்லு?"

லதா: கதை தான் நான் எழுதப் போகின்றேன்.

வாணி: "மீனா நீ என்ன சொல்லு?'

மீனா: "நான் முடிந்தால் கதையும் கவிதையும் எழுதுகின்றேன்."

ஆசீர்வாதம் செய்யுங்கள்: இவர்கள் மூவரும் புதிய பாதையில் காலடி எடுத்து வைக்கிறார்கள்.
துன்பம்,சோகம் இது இரண்டையும் தூர விலக்கி விட்டார்கள் புதிய பாதையில் கால் பதிக்கம் இவர்களை நீங்களும் ஆசிர்வாதம் செய்யுங்களேன்.

ஐந்தாவதாண்டில்.....

புதுப் பொலிவுடன்
புதிய சுவையுடன்

உங்கள்
போர்ட்டலோ!

போர்ட்டலோ...
சுவைக்க, தாகம் தீர்க்க,
பயணத்துக்குத் துணை கொடுக்க,
நான்கு காலத்துக்கும்
உற்ற நண்பன்!



70 Weybright Court, # 6,
Scarborough, ON.
(416) 293-6555

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபாஷ் பெயிலி

• வரசு



> "பெயிலி தனது கடைசி ஐம்பது மீட்டர் தூரத்தை 4.2 செக்கனில் ஓடினார். எனவே இருநூறு மீட்டர் தூரத்தை 16.8 செக்கனில் ஓடி முடித்திருப்பார்"

விளையாட்டுத் துறையைப் பொறுத்த வரை 1996ம் ஆண்டு கனடா நாட்டுக்கு தலை நிமிர வைத்த ஆண்டாகும். ஆம்! 1988இல் தென்கொரியாவின் சியால் நகரில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியின் போது நூறு மீட்டர் ஓட்டப் போட்டியில் கனடாவைச் சேர்ந்த பென்ஜோன்சன் 9.79 செக்கன்களில் ஓடி வெற்றி பெற்ற பின்னர் சிறுநீர்ச் சோதனையின் போது போதை வஸ்து உட்கொண்டோர் என்று நிருபிக்கப் பட்டதையடுத்து வெற்றி நிராகரிக்கப்பட்டது. இதன் மூலம் கனடாவிற்கு ஏற்பட்ட தலை குனிவை, 1996 அட்லாண்டா ஒலிம்பிக்கில் ஒக்வில் நகரைச் சேர்ந்த கொனலன் பெயிலி அவர்கள் தனது அபார திறமை மூலம் நிமிர்த்தி வைத்தார். ஜுலை 27ம் திகதி நூறு மீட்டர் தூரத்தை 9.84 செக்கன்களில் ஓடி புதிய உலக சாதனையை ஏற்படுத்தினார். பொதுவாக ஒலிம்பிக் நூறு மீட்டர் ஓட்டப் போட்டியில் வெற்றி பெறுபவரே உலகின் 'அதிவேக மனிதன்' என்ற பெயரைப் பெறுவராவார்.

வழமையாக சுவட்டு மைதான நிகழ்ச்சிகளில் அமெரிக்க வீரர்களே ஆதிக்கம் செலுத்துவர். அதனால் வேற்று நாட்டு வீரர்களின் திறமைகளை அவர்கள் பெரிது படுத்துவதில்லை. இதற்கு ஏற்றாற் போல் அமெரிக்க தொடர்பு சாதனங்கள் பெயிலியின் சாதனையை பெரிய அளவில் பெரிது படுத்தவில்லை. நூறு மீட்டர் உலகசாதனை ஏற்படுத்தி சரியாக ஐந்து நாட்களின் பின் இதே ஒலிம்பிக்கில் இருநூறு மீட்டர் ஓட்டப் போட்டியில் அமெரிக்காவின் மைக்கல் ஜோஷ்சன் 19.3 செக்கனில் ஓடி புதிய சாதனையை ஏற்படுத்தினார். ஜோன்சனின் இவ் வெற்றி, அமெரிக்க தொடர்பு சாதனங்களுக்கு அவல் கிடைத்தது போல் இருந்தது. உலகின் 'அதிவேக மனிதன்' ஜோன்சனே என மார்தட்டிக் கொண்டனர். அதற்கு சார்பாக எண்கணித விதிகளையும் பயன் படுத்தினர். அதாவது இருநூறு மீட்டர் 19.3 செக்கனில் ஓட முடியுமாயின் 100 மீட்டரை 9.65 செக்கனில் ஜோன்சன் ஓடுவார் என்பதே அமெரிக்காவின் வாதம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனடிய பத்திரிகைகள், இதற்கெதிராக தமது பக்க சார்பாக பெயிலி தனது கடைசி ஐம்பது மீட்டர் தூரத்தை 4.2 செக்கனில் ஓடினார். எனவே இருநூறு மீட்டர் தூரத்தை 16.8 செக்கனில் ஓடி முடித்திருப்பார் என்றார்கள். இன்னும் ஒருபடி மேல் சென்று 100 மீட்டர் ஓட்டப் போட்டியில் அமெரிக்கர் அல்லாத ஒருவர் வெற்றி பெற்றதாலேயே இவர்கள் கூப்பாடு போடுகின்றார்கள் என்று அமெரிக்க பத்திரிகைகளைச் சாடினார்கள். கனடிய விளையாட்டு விமர்சகர்கள். என்ன விடயமானாலும், வர்த்தக ரீதியிலான கண்ணோட்டத்துடன் பார்க்கும் அமெரிக்க, கனடிய நிறுவனங்கள்; இந்த சர்ச்சைக் குரிய விடயத்தை தமக்குச் சாதகமாக பயன்படுத்த தீர்மானித்தன. பிரபலமான இரு வீரர்களின் முகாமையாளர்களை மாறி மாறி அணுகி, ஈற்றில் ஒரு ஒப்பந்தத்திற்கு வந்தனர். அதாவது நூறு மீட்டரோ அல்லது இருநூறு மீட்டரோ ஓடாது பொதுவாக 150 மீட்டர் தூரத்தை இந்த இருவரையும் ஓடவைப்பது என்றும், இவர்களுடன் இன்னும் நான்கு சிறந்த வீரர்களையும் ஓடவிடுவதென்றும் தீர்மானித்தனர். இப் போட்டியில் பங்கு பற்றுவதற்கு மட்டும் இந்த இருவருக்கும் தலா ஒரு லட்சம் டொலர்கள் கொடுப்பதென்றும், வெற்றி பெறுபவருக்கு இரண்டு மில்லியன் டொலர்கள் கொடுப்பதென்றும் தீர்மானித்தனர். இப்போட்டி பெரும்பாலும் 1997 மே மாதம் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது. போட்டி நடைபெறும் இடம் இன்னும் தீர்மானிக்கப் படவில்லை. பெரும்பாலும் Skydome ஆக இருக்குமென்று நம்பப்படுகின்றது. இப்போட்டி வளைவு ஓடுபாதையில் (Curve Track) நடைபெறவுள்ளதாகப் மைக்கல் ஜோன்சனுக்கே தொழில் நுட்ப ரீதியில் வெற்றி வாய்ப்புக்கள் கூடவுள்ளதாக விளையாட்டு ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

எது எப்படி இருந்த போதிலும் பெயியின் சாதனை மகத்தானது என்பதை மறுக்கவோ, மறைக்கவோ முடியாது. ஒலிம்பிக்கின் 4×100 அஞ்சலோட்டப் போட்டியில் இறுதியாக ஓடிய பெயில் 8.95 செக்கினில் தனக்கு ஒதுக்கப்பட்ட 100 மீட்டரை ஓடி மேலும் ஒரு தங்கப்பதக்கத்தை பெற்று கொடுத்தார். இவரது திறமையைக் கௌரவிப்பதற்கு பல பத்திரிகைகள், நிறுவனங்கள் 1996ம் ஆண்டுக் கான அதி சிறந்த விளையாட்டு வீரராக தேர்க்தெடுத்திருக்கின்றன, பயிற்சியாளர் டன் பவ் (Dan pfaff) அவர்களின் வழிகாட்டலில், 1997இல் மெலும் பல வெற்றிகளை கனடாவிற்குப் பெற்றுத்தருவார் என 'ரோஜா'வின் சார்பில் நாமும் வாழ்த்துவோம்.

சிதறிய செய்திகள்

தென்னாபிரிக்கா கிரிக்கட் அணிக்கும் இந்திய கிரிக்கட் அணிக்கும் இடையே இந்தியாவில் நடைபெற்ற மூன்று டெஸ்ட் தொடரில் இந்தியா 2 - 1 என்ற கணக் கிவஸல் வெற்றி பெற்றது. புதிய இந்திய அணியின் தலைவர் சச்சின் டென்டுல்கா ருக்கு இது முதல் டெஸ்ட் தொடராகும்.

*****

இந்தியாவில் டெஸ்ட் தொடரில் தோல்வி யுற்ற தென்னாபிரிக்க அணி, சரியாக இருவாரங்களின் பின் தென்னாபிரிக்காவில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டி யில் இந்தணியை 335 ஓட்டங்களினால் வெற்றி பெற்றது. இந்திய அணி முதலாவது இன்னிங்சில் நூறு ஓட்டங்களையும் இரண்டாவது இன்னிங்சில் 66 ஓட்டங் களையும் பெற்றது குறிப்பிடத்தக்கது.

*****

அவுஸ்திரேலிய முன்னாள் அதி வேகப் பந்து வீச்சாளர் லின் வால் (Linwall) தனது 75வது வயதில் காலமானார். 61 டெஸ்ட் பந்தயங்களில் விளையாடிய இவர் (1945 - 60) 228 விக்கட்டுகளை வீழ்த்தியுள்ளார்.

*****

பிரபல Ice Hockey வீரர் பிரட் ஹல் (Brett Hull) அண்மையில் தனது 500வது கோலைப் போட்டு 22வது நபராக ஐநூறு Club இல் இணைந்து கொண்டார். சென்லூயிஸ் புளுஸ் அணிக்கு விளை யாடும் இவரே பொது முகாமையாளர் மைக் கீனனின் வெளியேற்றத்திற்கு காரண கர்த்தா ஆவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடு 5

• கரு கந்தையா



இந்த இதழில் கொண்டோமோனியம் (Condo) வாங்குவது நல்லதா அல்லது தனிவீடு வாங்குவது நல்லதா என்பாதக் கவனிப்போமா?!

Condo வாங்குவதில் உள்ள நன்மைகள்

வாசலில் பாதுகாப்புச் சேவை (Security) வசதி கிடைக்கலாம்.

Gym Room. Party room, Swimming pool, விளையாட்டு வசதிகள் (Tennis, Squash) போன்றவை கிடைக்கலாம்.

கட்டிடத்தின் வெளிப்புறப்பராமரிப்பு (புல் வெட்டுதல், Snow தள்ளுதல், யன்னல், கூரை மாற்றுதல், வெளிப்புறத்துக்கு paint அடித்தல் பற்றி நீங்கள் கவலைப்படத் தேவையில்லை. படியேறும் சிரமங்கள் இராது.

Condo வாங்குவதை விடுத்து, தனி வீடு வாங்குவதில் உள்ள நன்மைகள்

Condo Coporation சட்ட திட்டங்கள் கெடுபிடிகள் இல்லை.

பராமரிப்புச் செலவு Maintainance fee என்ற நிரந்தரமான ஒரு செலவைத் தவிர்க்கலாம்.

Condoவைப் போலல்லாது காணி உங்களுக்குச் சொந்தமானது. வெளிப்புறத்திலும் சொந்தம் கொண்டாடலாம்.

Condo வில் இருப்பது நீங்கள் முந்திய வாடகைக்கு Apartment இல் இருந்த அமைப்பைப் போல இருக்கலாம். தனி வீட்டில் அந்த அமைப்பு இல்லை.

வயதானவர்கள், காற்று வாங்க வெளியில் இலகுவில் போய் வரமுடியும்.

உள்ளே இடவசதி அதிகம் பின்னுக்கு காணிவசதி பிள்ளைகள் விளையாட இடம் இருக்கும். காற்றேட்டம் இருக்கும்.

வாகனம் உங்கள் வீட்டுக்கு முன்னால் நிற்பாட்ட முடியும்.

வீட்டுக்குள்ளேயும் வெளியேயும் நீங்கள் விரும்பியபடி மாற்றங்கள் அலங்காரங்கள் செய்ய முடியும்.

★★★★★

முதன் முதலாக வீடு வாங்குபவர்கள் அதிகமாக விடும் தவறுகள்:

பழைய வீடு ஒன்றை வாங்க நேரிட்டால் அதற்கு ('Inspection') வீட்டின் தன்மையை பரிசோதித்து வாங்கத்தவறுதல். இதற்கென அங்கீகாரம் பெற்ற Home Inspection உள்ளார்கள். அதற்கான செலவு 250 - 350 வரை இருக்கும் - Inspection செய்வது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன முக்கியமான பிழைகள் உண்டென (கூரை, basement வெடிப்பு, Heating system, air conditioning system plumbing) அறியவும், அதைத் திருத்த எவ்வளவு செலவு ஏற்படும் என்பதை புரியவும் உதவும்.

நீங்கள் வசிக்கும் பகுதியில் வீடு விற்கப் போட்டிருப்பது கண்டதும் அந்த company உடன் தொடர்பு கொண்டு உங்களுக்கு பழக்கமில்லாத ஒரு (Agent உடன் அந்த வீட்டைச் சென்று பார்வையிட்டு வாங்க முயல்வது.

இங்கு விற்கப் போட்டிருக்கும் வீடுகளின் விபரங்கள் எல்லாம் பொதுவான ஓரிடத்தில் (Real Estate Board) இல் சேர்கின்றன. அந்த விபரங்களை எந்த ஒரு Agent இனாலும் Computer வசதியுடன் பெற்றுக் கொள்ள முடியும். அப்படியிருக்க, உங்களுக்கு அறிமுகமில்லாதவர்களை நாட வேண்டிய அவசியமில்லை. தங்களுக்குத் தெரிந்த பழக்கமான Real Estate Agentஐத் தொடர்பு கொண்டு செயற்பட்டால் அவர் உங்களுக்கு அந்த வீட்டின் நன்மை தீமைகளையெல்லாம் நிதானமாக விளங்கப் படுத்தி வாங்கித்தருவதற்கு முயற்வார்.

தற்போதைய நிலை வீடு வாங்குவதற்கு உகந்த நிலையா?

உகந்த நிலை என்பதற்கு முக்கியமான சில காரணங்கள் உள்ளன.

கடந்த 35 வருடங்களில் ஆகக் குறைந்த வட்டிக்கு வீட்டுக் கடன் எடுக்கக் கூடிய நிலை தற்போதுதான் உள்ளது.

(உதாரணமாக $150,000 கடனை 625%க்கு வட்டிக்குப் பெற்றால் மோட்கேஜ் (Morgage $475.00 தான் ஆகிறது).

கணக்குப்பார்த்தால் நீங்கள் வாடகைக்குக் கட்டும் பணமளவுக்குத்தான் தற்போதைய சொந்த வீட்டுக்குரிய கட்டுப்பணங்களும் வருகிறது. இப்போது வீடு வாங்க இயலாதவர்கள் இன்னும் சில வருடங்களுக்கு வாங்கக்கூடிய சூழ்நிலை வருவது கடினம்.

வீடுகளின் பெறுமதியும் குறைந்த நிலையில் உள்ளன. (சிறிது விலையேற்றம் கடந்த மாதங்களில் அவதானிக்கக் கூடியதாக இருந்தது)

வாடகைக் கட்டுப்பாடு (Rent control) தளர்த்தப்பட்டுள்ளது. வாடகை உயர்வதை இப்போது தடுக்க முடியாதவர்களாகி விட்டீர்கள்.

நாட்டின் பொருளாதாரம் முன்னேறுவதை அவதானிக்க முடிகிறது. இது வீட்டு விலையை எதிர்காலத்தில் உயர்த்தும் என்பது நாமறிந்ததே.

புன்னகை பொன்னகையைவிடச் சிறந்ததல்லவா.... உங்கள் பற்களை பாதுகாருங்கள்!

ஸ்காபுரோ பல் வைத்திய நிலையம்

டாக்டர் ஆதி கணபதி சோமசுந்தரம்

& சகாக்களும்

வாரத்தில் ஏழு நாட்களும் காலை 9.00 - மாலை 9.00 மணிவரை

2155 Lawrence Av. E., Suit 10, (at Birchmount) Tel: 416-750-9969

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஒரு ரோஜாவின் போராட்டம்' பாடல்களின் ஒலிப்பதிவில்......

• தமிழினி

கனடா - தமிழ் கிரிஜேட்டஸ் தயாரிக்கும் வீடியோத் திரைப் படத்தின் பாடல்கள் ஒலிப் பதிவு வேலைகள் முடிவடைந் துள்ளதாக தெரியவந்துள்ளது. இப்படத்தின் CD இசைத்தட்டின் வெளியீட்டு விழாவும் படத்தின் பூஜையும் பெப்ரவரி மாத ஆரம் பத்தில் நடைபெறும் எனவும் அறியப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த CD இசைத்தட்டில் முத்தான பத்துப் பாடல்கள் இருப்பதாகவும், முதல் ஆறு பாடல்களும் 'ஒரு ரோஜாவின் போராட்டம்' படத்துக்காக, சிறந்த எழுத்தாளர் கலைவாணி இராஜகுமாரன், முல்லையூர் கே. பாஸ்கரன் மற்றும் 'ரோஜா' ஆனந்த் ஆகியோரினால் எழுதப்பட்ட பாடல்கள்; மற்றைய நான்கு பாடல்.களும் 'பாஸ்கியின் ராகங்'களாக ரகுமான், உமா குமாரசாமி, பாஸ்கி ஆகியோர் எழுதியிருப்பதாகவும் மேலும் தெரிவருகிறது. கணனி இசையில் கைதேர்ந்த முல்லையூர் கே. பாஸ்கரன் இசையமைப்பில் வெளியாகும் முதல் CD இசைத்தட்டு இதுவாகும்.

இதில்வரும் பாடல்களை சிறந்த இளம் பாடகி அருட்செல்வி அமிர்தானந்தர், மாலினி எலிசபெத், உமானந்தினி இராஜேந்திரம், வளர்ந்து வரும் இளம் பாடகர் ஈஸ்வரன் இவர்களுடன் கே. பாஸ்கரன் ஆகியோர் பாடியுள்ளனர்.

பக்கவாத்தியக் கலைஞர்களாக நாவலன், அனந்தகுமார், சிவா, இவர்களுடன் ஸ்ரீமதி. விஜயலட்சுமி சீனிவாசன் ஆகியோரும் பங்கெடுத்துள்ளனர்.

மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பு இந்த CD இசைத்தட்டுக்கு இருக்கும் என்பதில் ஐயமில்லை.

ஒலிப்பதிவில் எடுக்கப்பட்ட படங்களை இங்கே காணலாம்.

படங்கள்: 'திருமலை' செல்வன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

YARLTON MARKET

9 CLINTWOOD GATE #4 & 5A
On Victoria Park Ave

Photocopying
& Fax Services

Tel/Fax: (416) 445-5352
Tel: (416) 445-5763

Lotto 649, TTC டிக்கற், முத்திரை, Metro Pass
இலங்கை, இந்திய, கனேடிய உணவுப் பொருட்கள்
பால், பழம், மரக்கறி வகைகள்,
உடன் இறைச்சி, கடலுணவு வகைகளுக்கு



யாழ்ரன் மார்க்கற்

நான் ஒரு வழக்கறிஞர் இல்லை!

குடிவரவு சட்டம் IMMIGRATION LAW

- அகதி நிலை விண்ணப்பம்
- மேன்முறையீடு
- ஸ்பொன்சர்

குற்றவியல் சட்டம் CRIMINAL LAW
விபத்தால் பாதிக்கப்பட்டவர்க்கு ACCIDENT VICTIMS

ஆகியவற்றில் அனுபவமுள்ள வழக்கறிஞர்களுடன்
மொழிபெயர்ப்பாளராகவும், உதவியாளராகவும் தொழில் புரிகின்றேன்.

உங்களுக்குத் தேவையான சட்டசம்பந்தமான
உதவிகளுக்கு தொடர்புகொள்ளுங்கள்...

எஸ்.கே. தீசன் (416) 631-6322

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அறிமுகம் 'விவேகச் சக்கர'த்தில் கேட்கப்பட்டிருக்கும் பல்துறை சார்ந்த எட்டு கேள்விகளுக்கும் சரியான பதில்களை எழுதி கீழ் காணும் கூப்பனுடன் 'ரோஜா'வின் முகவரிக்கோ அல்லது தொலைநகல் இலக்கத்துக்கோ இம்மாதம் 31ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவையுங்கள்.

சரியான பதில்களை எழுதிய அதிஷ்டசாலிகளில் ஒருவருக்கு 10 டாலர்கள் பரிசாக வழங்கப்படும். எவருமே சரியான பதில்களை எழுதத்தவறினால் அடுத்தமாதம் பரிசுத்தொகை 20 டாலர்களாக அதிகரிக்கும். உதாரணத்துக்கு ஒன்பது மாதங்களுக்கு தொடர்ந்து எவருமே பரிசு பெறாமல், பத்தாம் மாதம் ஒருவர் சரியான பதில்களை எழுதி பரிசு பெறும் வாய்ப்பைப் பெறுகிறார் என வைத்துக்கொள்வோம்; அவர் 100 டாலர்களைப் பரிசாகப் பெறுவார்!

பெயர்: ______________________

முகவரி: ______________________

____

____

தொலைபேசி: (   ) ______-______

ஜனவரி 97

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ABIRAMI MOVING CO.

SHOT OR LONG DISTANCE - FAST MOVING & DELIVERY SERVICE

உங்கள் சகலவிதமான இடமாற்றத்திற்கும் அழையுங்கள்

அபிராமி இடமாற்ற சேவை

- HOME
- OFFICE
- APARTMENT

- பொருட்களின் பாதுகாப்பு எங்கள் உத்தரவாதம்!
- குறைந்த செலவில் நிறைந்த சேவை!!

AMC

தொடர்புகளுக்கு:

ராஜன்: **(416) 282-3254**

Mobile: **(416) 560-9179**

உங்கள் அனைத்துத் தேவைகளையும்
பூர்த்தி செய்து கொள்ள நாடுங்கள்

PRINCESS PLAZA வில்

துவாரகாஸ்

1670 Victoria Park Ave.,
Toronto, Ont.
Tel: (416) 757-1091

'ரோஜா' மாத சஞ்சிகையின் வருட சந்தாவுக்கான கழிவுக் கூப்பன்

$5.00 OFF

EXP. MAR. 31/97

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

INTERNATIONAL INSURANCE / FINANCIAL SERVICES

&

BST INSURANCE BROKERS

சர்வதேச காப்புறுதி + நிதிச்சேவை

*ஆயுள்காப்புறுதி
*வீடு
*வாகனம்
*வியாபார நிலையங்கள்
*சுகாதாரம்
*கல்வி

A. VELUPPILLAI (Vel)
(Life Consultant & Insurance Broker)
காப்புறுதி ஆலோசகர்

கனடாவில் 11 வருட காப்புறுதி அனுபவம் சகல காப்புறுதி விளக்கங்களும் தமிழில் வழங்கப்படும்.

ELEVEN CONTINUOUS YEARS IN CANADIAN INSURANCE INDUSTRY

Life Section - Under International Insurance
Property Section - Under BST Insurance

எம்மால் சகல வித காப்புறுதிகளும், உலகில் சிறந்த காப்புறுதி ஸ்தாபனங்களில் நியாயமான விலையில் உத்தரவாதத்துடன், உங்கள் விருப்பத்திற்கமைய, உங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யத்தக்க வண்ணம் ஒழுங்கு செய்து வழங்கப்படும்.

ஆயுள் காப்புறுதி விசேட ஆலோசனைகள் உண்டு.

அழையுங்கள்:-

Tel: (416) 499-9596
Fax: (416) 499-9382

2190 Warden Ave., Suite. 203,
Scarborough, ON. M1T 1V6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிவந்துவிட்டது!

தமிழீழக் கலைஞருடன் தமிழகக் கலைஞர்கள்
இணைந்து வெளியான 'இசை முத்துக்கள்'

- தெய்வீக கானங்கள்
- கர்நாடக இசையமுது
- வயலின் இசை

தொடர்புகளுக்கு:

நாதாலயா

(416) 438-6247

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

L. Krishoth Typesetting 416-425-2884